வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 19.01.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 19 | பக்கங்கள் : 12

# 13 பிளஸை செயல்படுத்த ஜனாதிபதி ரணில் திட்டம்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜனவரி 19

**13 பிளஸ் என்பதை வேறுகோணத்தில் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிமரசிங்க முயற்சிக்கின்றார் எனவும், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையை இரத்து செய்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்குச் சென்று கூறிய விடயம் என்ன? மாகாண சபைக்குரிய அதிகாரங்களை முழுமையாக செயற்படுத்திக் கொள்ளுங்கள், நான் இடையூறு விளைவிக்கமாட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது அரசமைப்பு மறுசீரமைப்பை செய்யுமாறு என்னிடம் கேட்க வேண்டாம், நீங்கள் முதலமைச்சர் நிதியத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள், என்னால்

11



## உகண்டா சென்றார் ரணில்

கம்பாலா, ஜன. 19

உகண்டாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு துப்பாக்கி வேட்டு முழக்கத்துடன் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

கம்பாலா நகரை சென்றடைந்த ஜனாதிபதியை உகண்டாவின் வெளிவிவகார அமைச்சர் ஓரியெம் ஒகெல்லோ மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் கென்யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி கனகநாதன் ஆகியோர் வரவேற்றனர்.

சிவப்பு கம்பளம் மற்றும் அரச வரவேற்புடன் கூடிய இந்த வரவேற்பு இலங்கைக்கும் உகண்டாவுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகளை வெளிப்படுத்தியது.

11

## அனுபவமற்றவரை ஜனாதிபதியாக்கி நாட்டை மீள ஆபத்தில் தள்ளமுடியாது

### ரணிலுக்கு மீண்டும் சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும் என்கிறார் பிரசன்ன



கொழும்பு, ஜன. 19

அனுபவம் இல்லாத ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்து மீண்டும் நாட்டை ஆபத்தில் தள்ள முடியாது என ஆளும் கட்சியின் அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட இணைப்புக்குழு கூட்டத்தின் பின்னர் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

11

## பொலிஸ் சரியாக செயல்பட்டிருந்தால் ஈஸ்டர் தாக்குதலை தடுத்திருக்கலாம்

### அமைச்சர் டிரான் அலஸ் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 19

பொலிஸ் அதிகாரிகள் சிலர் சரியாக செயற்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்திருக்க முடியும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அதற்கு முன்னதான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை மிக நுணுக்கமாக ஆய்வு செய்திருந்தால் இதனை தடுத்திருக்க முடியுமென அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, சில பொலிஸார் சிலர்

11

## ஜனாதிபதி வேட்பாளராக நாமலை நிறுத்த முயற்சி!

### கோரிக்கை விடுக்க தயாராகும் பெரமுனவின் இளம் எம்.பிக்கள்

கொழும்பு, ஜன. 19

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்க பொதுஜன பெரமுனவின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிராம மட்டத்தில் நாமல் ராஜபக்ஷவுக்கு

11

## யாழ்.ராணியுடன் மோதி விபத்து: கிளிநொச்சியில் குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் ரயில் விபத்தில் சிக்கி இளம் குடும்பஸ்தர் பலியாகியுள்ளார். குறித்த விபத்து நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ். ராணி ரயிலுடன் மோதுண்டே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

11

## உரும்பிராய் ஆலய சூழலில் கஞ்சா விற்றவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன. 19

உரும்பிராயில் ஆலயத்துக்கு அண்மையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவரை கோப்பாய் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

உரும்பிராய், ஞானவைரவர் ஆலய சூழலில் 56 வயதான ஒருவர் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

போதைப்பொருள் விற்பனை செய்தவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து 20.7 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. (அ)

## ரணிலே பொது வேட்பாளர்!

### மாவட்ட மட்டங்களில் தீர்மானம்

கொழும்பு, ஜன. 19

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தேசிய பொதுவேட்பாளராக களமிறங்க வேண்டும் என மாவட்ட மட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்

11

## ஒக். 18ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்!

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதிக்கு ஒருமாதத்திற்கு முன்னர் நடத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு செய்துவருவதாக ஆணைக்குழுவின் தலைவர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் பல் வேறு கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. அர சாங்கம் தேர்தலை ஒத்திவைக்க

11

## ஐ.தே.கவினரின் பொதுக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு

### முக்கிய தலைவர்கள் நாட்டில் இல்லை

கொழும்பு, ஜன. 19

ஐக்கிய தேசியக் கட்சி இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்தவிருந்த பொதுக் கூட்டத்தை காலவரையறையின்றி ஒத்திவைக்க தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முதல்கட்ட பிரசாரத்தை ஆரம்பிக்கும் வகையில் ஐ.தே.க நாளை கொழும் பில் பிரமாண்ட கூட்டமொன்றை நடத்தவிருந்தது. இதற்கான ஏற்பாடுகளை கடந்த

11

# இப்படியும் நடக்கிறது

ஜனவரி முதலாம் திகதி முதல் வற் வரி மூன்று வீதம் அதிகரித்தது கூட பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடவில்லை. ஆனால், இதுகாலவரை வற் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களுக்கும் இப்போது வற் வரி அறவிடப்படுவதுதான் சாமானியர்களையும் பாதித்திருக்கின்றது.

இவ்வாறு புதிதாக வற் வரி அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்களில் எரிபொருள் மற்றும் மின்சாரம் என்பனவும் அடங்குகின்றன. இதனால் எரிபொருட்களின் விலை என்று மில்லாதவாறு அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பு காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன. இரு பத்திநான்கு மணி நேரமும் இயங்கி வந்த சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இப்போது பகலில் மாத்திரம் இயக்கத் தொடங்கியுள்ளன. பெரும்பாலான தனியார் வாகனங்கள் அத்தியாவசியப் பயணங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு கார், இரண்டு மோட்டார் சைக்கிள் என்று இருந்த ஒருவர் தற்போது முடிந்தவரை மோட்டார் சைக்கிளில் செல்கின்றார். அதைவிட முக்கியமான தேவைகளுக்கு மாத்திரமே பயணம் செய்யும் அளவிற்கு பயணங்களை மக்கள் குறைக்கத் தொடங்கிவிட்டனர்.

டீசலை அதிகளவில் பயன்படுத்திய பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் பல நாள் மீன்பிடிப் படகுகள் படிப்படியாக தமது நுகர்வை குறைத்து வருவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"தற்போது எமது எரிபொருள் விற்பனை நிலையங்களை இயக்குவது எமக்கு பிரச்னையாக உள்ளது. பணியாளர்களை குறைக்க வேண்டியதாக இருக்கின்றது. மேலும், இரவில் திறந்திருந்த பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தற்போது திறக்கப்படுவது இல்லை. மின்சார கட்டணம் மற்றும் இதர கட்டண உயர்வால் பாதிக்கப்பட்டுள்ளோம்" என்கிறார் ஒரு எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளர்.

எரிபொருள் விலைகள் பன்மடங்கு அதிகரித்ததால் அதன் விற்பனை குறைந்து விட்டது மட்டுமல்ல நாம் எதிர்கொள்ளும் பிரச்னை. அதைவிட முக்கியமானது இன்னுமொரு விவகாரம். அதனை எழுதுவதே இந்தப் பத்தியின் நோக்கமும்.

ஒரு நாட்டில் எரிபொருள் வர்த்தகத்தை எவர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாரோ அவரே அங்கு மிகப் பலம்வாய்ந்த வர்த்தகராக இருப்பார். இந்தியாவின் முதல் பணக்காரரான அம்பானி அந்த நாட்டின் எரிபொருள் வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துபவர். அதேபோலத்தான் மலேசியாவில் நமது தமிழரான ராதாகிருஷ்ணன் அங்கு எரிபொருள் வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்.

இங்கே இதுகாலம் வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே பெற்றோலிய பொருட்கள் விற்பனையில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது. பின்னர் இந்திய ஐஓசி வந்தபோதிலும் அவர்களிடம் ஏகபோக உரிமை சென்றுவிடக் கூடாது என்பதில் பெற்றோலிக் கூட்டுத்தாபனம் கவனமாக இருந்தது.

ஆனால் அந்த நிலமை இப்போது மெல்ல மெல்ல மாறி வருகின்றது.

நாட்டில் டொலர் கையிருப்பு முற்றாக இல்லாமல் போனபோது, எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அப்போதுதான் நாம் வீதியில் அதற்காக நிற்கவேண்டிவந்தது, அந்த நிலைமையைத் தொடர்ந்து சீன நிறுவனம் ஒன்றுக்கும் அவுஸ்திரேலிய, அமெரிக்க நிறுவனங்களுக்கும் பெற்றோலிய வர்த்தகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இப்போது அதன் ஏகபோகம் மெல்ல மெல்ல நம்மிடமிருந்து பறிபோய்க்கொண்டிருக்கின்றது.

இப்போது இந்திய மற்றும் சீன நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதும், தனது விநியோகஸ்தர்களுக்கு சலுகைகளை வழங்குவதும் படிப்படியாக அந்த வர்த்தகத்தின் ஏகபோக உரிமை அந்த நிறுவனங்கள் வசம் சென்றுகொண்டிருக்க காரணமாகியிருக்கின்றது.

நமக்குத் தேவையான எரிபொருளை நாமே இறக்குமதி செய்து சேமித்து வைக்க முடியாததால், இன்று தினமும் தேவையான எரிபொருட்களையும் அந்த சீன - இந்திய நிறுவனங்களிடமே வாங்கவேண்டிய அளவிற்கு நிலமை சென்றிருக்கின்றது.

இந்த பொருளாதார நெருக்கடி நம்மிடமிருந்து இன்னும் என்ன என்ன விடயங்களையெல்லாம் காவு கொள்ளப்போகின்றதோ தெரியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

# ஒரு மாத சுற்றிவளைப்பில் 40,000 பேர் கைது

கொழும்பு, ஜன. 19

போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுக்கும் நோக்கில் நாட்டில் முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளது.

இந்த சுற்றிவளைப்புகளின் ஊடாக இதுவரை 40,590 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டார்.

அதேநேரம், கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி 4,791 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களின் 725 மில்லியன் ரூபாய் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட



சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 943 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான 25 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில், ஐஸ் ரக போதைப்பொருள், ஹெரோயின், கேரள கஞ்சா உள்ளிட்ட பல போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம் காவல்துறை போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட பணியகத்தினால் தேடப்படும் பட்டியலிடப்பட்டிருந்த 32 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது

இதேவேளை, இன்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த பதில் காவல்துறை மா அதிபர் தேசபந்து தென்னகோன், குற்றப்புலனாய்வு திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கு, காவல்துறை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

அதேநேரம், திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தற்போது நாட்டில் இருந்து தப்பிச்சென்றுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பதில் காவல்துறை மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிட்டார். (அ)

# ஏப்ரலுக்கு பிறகே மரக்கறி விலை குறையும்!

கொழும்பு, ஜன. 19

"நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில், வரலாற்றில் முதல் தடவையாக கரட் உள்ளிட்ட மரக்கறிகளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது." - என்று நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவரும் அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார நிலையத்தின் ஆலோசகருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் ஏப்ரல் மாதம்வரை மரக்கறி விலை குறைவதற்கான சாத்தியம் இல்லை எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா மத்திய பொருளாதார காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நாட்டில் கடந்த வருட இறுதியில் பெய்த கடும் மழை காரணமாக அதிகமான பிரதேசங்களில் ஏராளமான மரக்கறி வகைகள் அழிவடைந்துள்ளன. இதன் காரணமாகவே நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார நிலையங்களிலும் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன், நுவரெலியா பிரதேச விவசாயிகளிடம் இருந்து கடந்த ஓரிரு நாட்களாக கரட் கொள்வனவு செய்யப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட கரட் சரியான தரம் வாய்ந்ததாக இல்லை. அதிக விலை காரணமாக முன்கூட்டியே அறுவடை இடம் பெறுகின்றது.

கடந்த காலங்களில் நுவரெலியா மத்திய பொருளாதார நிலையத்தில் இருந்து ஏனைய வெளி மாவட்டங்களில் உள்ள பொருளாதார நிலையங்களுக்கு நாளொன்றுக்கு 35 ஆயிரம் கிலோ கரட் அனுப்பப்பட்டது. ஆனால் தற்போது அந்த அளவு குறைவடைந்து, நாளொன்றுக்கு ஐந்தாயிரம் முதல் ஆறாயிரம் அளவிலே அனுப்படுகின்றது. இதனால் மத்திய நிலையத்தில் தொழில் புரிந்த 200 இற்கும் அதிகமானவர்கள் தற்போது தொழில் இழந்து நடுவீதியில் நிற்கின்றனர்.

இதுபோலவே ஏனைய மரக்கறி வகைகளும் சீரற்ற கால நிலை ஏற்பட்டு அழிவடைந்த காரணத்தால் அவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு அதிக விலைகளுக்கே விற்பனை செய்யப்படுகின்றது. அவைகளும் சிறந்த தரத்தில் இல்லை என்பதும் உண்மையான விடயம்." - என்றார்.

(அ)

# கண்காணிப்பு பொறிக்குள் கொழும்பு!

கொழும்பு, ஜன. 19

" கொழும்பில் உள்ள சிசிரிவி கமரா கட்டமைப்பு மூலம் போக்குவரத்து கண்காணிப்பு இடம்பெறும். போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடும் சாரதிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கான அபராத சீட்டு அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அத்துடன், அவர்கள் இழைத்த போக்குவரத்து விதிமீறல் குறித்த காணொளியும் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்."

- இவ்வாறு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

ஜனவரி 22 ஆம் திகதி முதல் சிசிரிவி கமரா கட்டமைப்புமூலம் போக்குவரத்து கண்காணிப்பு இடம்பெறும் எனவும் அவர் அறிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே பதில் பொலிஸ்மா அதிபர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

கொழும்புக்கு வந்து அபராதத்தை செலுத்துவதைவிட, அவர்கள் உள்ள பகுதிகளிலேயே அதனை செலுத்துவதற்குரிய ஏற்பாடும் செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

(அ)

# வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை!

கிளிநொச்சி, ஜன 19

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் இதுவரை உரிமை கோரப்படாத வாகனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட உள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

குறித்த வாகனங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து விற்பனை செய்யப்பட உள்ளன. மோட்டார் சைக்கிள்கள், பட்டா வாகனம் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

ஏல விற்ப னைக்கு உட்படுத்தப்பட உள்ள வாகனங்களை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் தமது கோரிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்துடன் குறித்த வாகனங்களை, ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னர் பார்வையிட முடியும். ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த கூடிய செல்லுபடியான ஆவணங்களுடன் பிரசன்னமாகி இருக்க வேண்டும் எனவும் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.01.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், தை 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் பிரச்னை கண்டுகொள்ளாமல் விடப்படலாம்

இலங்கை அரசாங்கம் செங்கடல் பிரச்னையில் தலையிட்டதை எம்.ஏ.சுமந்திரன் விமர்சித்திருக்கின்றார். ரணில் அணிசாரா கொள்கையைப் பற்றி பேசிக்கொண்டு, மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்னைக்குள் தலையிடுவதாக கூறுகின்றார். அவ்வாறாயின் பலஸ்தீனப் பிரச்னைக்குள் சஜித் பிரேமதாச மூக்கை நுழைப்பதை எவ்வாறு புரிந்து கொள்வது? அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற பலஸ்தீனர்களுக்கு ஆதரவான - இஸ்ரேலுக்கு எதிரான கண்டன பேரணியில் சஜித் பிரேமதாச பங்குகொண்டு, தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். பலஸ்தீன தூதுவருடன் இணைந்து, குரலெழுப்பியிருந்தார். நடுநிலை அல்லது அணிசாரா என்னும் சொற்களின் வழியாக நோக்குவதனால், சஜித் பிரேமதாசவின் அணுகுமுறையும் தவறானதுதான் ஆனால், அது பற்றி சுமந்திரன் பேசவில்லை.

இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தில் பலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டை எடுப்பது, சார்புநிலையையே வெளிப்படுத்தும். நடுநிலை என்றால் இந்த பிரச்னைக்குள் நமது அரசியல்வாதிகள் மூக்கை நுழைக்கக் கூடாது. இஸ்ரேலை எதிர்க்கவும் வேண்டியதில்லை பலஸ்தீனத்தை ஆதரிக்கவும் வேண்டியதில்லை. அப்படி இருந்தால்தான் அதற்கு பெயர் அணிசாரா அணுகுமுறையாகும்.

இதனை ஒரு புறமாக வைத்துவிட்டு தமிழர் பிரச்னையை நோக்கினால், ரணிலின் கொள்கை, அரசாங்கத்தின் கொள்கை எதுவாகவும் இருக்கட்டும், அது அவர்களின் பிரச்னை. நமது பிரச்னை என்ன? நமது பிரச்னையை அணுகுவதற்கு நமக்கு எவ்வாறான அணுகுமுறை தேவை - அணிசார்ந்ததா அல்லது அணிசாராததா?

உலக அரசியல் வேகமான மாற்றங்களை எதிர்கொண்டு வருகின்றது. அதேவேளை, பிராந்திய அளவிலும் சீனாவின் செல்வாக்கினால் பதற்றங்கள் அதிகரிக்கின்றன. ஏற்கனவே ஒரே நேரத்தில் இரண்டு யுத்தங்களை உலகம் எதிர்கொண்டு வருகின்றது. இது யுத்தங்களுக்கான காலமாகவே நீளப் போகின்றது.

தற்போது பாகிஸ்தான் எல்லைக்குள் ஈரான் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றது - இதற்கு பதிலாக, பாகிஸ்தான் ஈரானின் எலைக்குள் சென்று தாக்குதல்களை நடத்தியிருக்கின்றது. மத்திய கிழக்கில் பெரும் யுத்தங்கள் எவ்வேளையிலும் மூழலாம். அதே போன்று, இன்னும் சில வருடங்களுக்குள் தாய்வானை நோக்கி சீனா படையெடுக்கலாம் என்னும் கணிப்பு பலமடைந்துவருகின்றது. தற்போது தாய்வானில் ஆட்சிக்கு வந்திருக்கும் கட்சியினர், சுயாதீன தாய்வானில் உறுதியாக இருப்பவர்கள். இதனை சீனா ஏற்றுக்கொள்ளவில்லை. தாய்வானை தன்னுடைய பகுதியென்றே சீனா வாதிட்டுவருகின்றது.

ஒட்டுமொத்தமாக நோக்கினால், உலகம் யுத்தங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் மக்கள் மீதான ஒரளவு கரிசனையும் கூட இல்லாமல் போவதற்கான வாய்ப்பே உள்ளது. இதனை தமிழ் கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? என்ன செய்யப் போகின்றன? இது பற்றித்தான் தமிழர் தரப்பு சிந்திக்க வேண்டும்.

# உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதனூடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 19

சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என சுட்டிக் காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பு இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர் நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்னைகளையும், வங்கிகள் ஊடக கடன் வசதிகளை பெற முற்படும் போது ஏற்படும் இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சுயதொழில் முயற்சியாளர்களின் கருத்துக்களில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என தெரிவித்தார்.

அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் துறைசார் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 20ஆம், 21ஆம் திகதிகளில் சிறுவர்களுக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜன. 19

இதுவரை தட்டம்மை தடுப்பூசி செலுத்தப்படாத சிறுவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அதன் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். ஆர்னல்ட் இதனை தெரிவித்துள்ளார். 9 மாதங்கள் முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு குறித்த தடுப்பூசி செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், 6 மாதம் முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கான தட்டம்மை தடுப்பூசியும் எதிர்வரும் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் செலுத்தப்படும்.

அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு சென்று குறித்த தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வவுனியா ஆலயத்தில் பூசை வழிபாடு




வவுனியா, ஜன. 19

பொலிஸாரின் யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வவுனியா, குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கிணங்க யுக்திய போதைப் பொருள் ஒழிப்பு வேலைத் திட்டம் பொலிஸாரால் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு ஒரு மாதம் பூர்த்தி அடைந்துள்ளது.

இந்நிலையில் யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வவுனியா, குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. விசேட பூஜை வழிபாட்டில் வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் களுவாராச்சி, தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி, பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமுதாயப் பொலிஸ் குழுவினர், சிவில் பாதுகாப்பு குழுவினர் என பலரும் கலந்துகொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 19 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - தை 05**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : நவமி**




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப்பார்க்க வேண்டி வரும். விட்டுக்கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**இடபம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கடகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமையான நாள்.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும்.வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**தனுசு**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல்நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள்.மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

# தமிழக எதிர்க்கட்சித தலைவருடன் அமைச்சர் ஜீவன் தொண்டமான் சந்திப்பு!

*சென்னை, ஜன. 19*

தமிழக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கும், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. சென்னையில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், தமிழக சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் கே.ராஜூவும் பங்கேற்றார். 10 இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக தமிழர்களின் மேம்பாட்டுக்காக அ.தி.மு.க. தொடர்ந்தும் குரல் கொடுத்துவருவதற்கு நன்றிகளை தெரிவித்தார். அத்துடன், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைக்கும் வகையில் நடத்தப்பட்ட நாம்



- 200 நிகழ்ச்சி குறித்தும், எதிர் வரும் 21 ஆம் திகதி மலையகத்தில் நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழா தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். அதேவேளை, இலங்கைக்கு குறிப்பாக மலையக பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளுமாறும் எடப்பாடி பழனிசாமிக்கு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார். (அ)

# தமிழக கடற்றொழிலாளர்கள் கைது; ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்!

*சென்னை, ஜன. 19*

இலங்கை கடற்படையினரால் தமிழக கடற்றொழிலாளர்களும் மீன் பிடிப்படகுகளும் சிறைபிடிக்கப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

கடற்றொழிலாளர்களின் விடுவிப்பு தொடர்பாக கடந்த 3 நாட்களுக்குள் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் எழுதும் 2ஆவது கடிதம் இது என்பது குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது.

இந்தநிலையில் இலங்கை கடற்படையினரால் தமிழக கடற்றொழிலாளர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவது குறித்து தமிழக முதலமைச்சர் தனது ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 13 ஆம் திகதியன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 10 பேரையும், 18ஆம் திகதியன்று 18 பேரையும் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்றொழிலாளர்களை விடுவிக்கவேண்டும் என்பதுடன், அனைத்து படகுகளையும் விடுவிக்க தெளிவான காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டுமென்றும் ஸ்டாலின் தமது கடிதத்தில் கோரியுள்ளார். (அ)

# மோடி வருகையால் சென்னையில் 5 அடுக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடு

*சென்னை, ஜன. 19*

பிரதமர் நரேந்திர மோடி இன்று சென்னை வருகிறார். நேரு விளையாட்டு அரங்கில், கேலோ இந்தியா யூத் கேம்ஸ்-2023 விளையாட்டு போட்டியை அவர் தொடங்கி வைக்கிறார். இந்நிலையில் பிரதமரின் வருகையை ஒட்டி சென்னையில், பெருநகர காவல்துறை சார்பில் 22,000 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “பிரதமர் நரேந்திர மோடி சென்னை, பெரியமேட்டிலுள்ள, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், கேலோ இந்தியா யூத் கேம்ஸ்-2023 விளையாட்டு போட்டியை தொடங்கி வைக்கிறார். பிரதமரின் சென்னை வருகையையொட்டி சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர் தலைமையில், கூடுதல் காவல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்களுடன் கலந்தாய்வு நடைபெற்றது.



அந்த ஆலோசனைக் கூட்டத்தில், பிரதமரின் வருகையை ஒட்டி சென்னை பெருநகர காவல் ஆணையாளர் தலைமையில், சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள், காவல் இணை ஆணையாளர்கள், காவல் துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து மற்றும் சிறப்பு பிரிவுகளின் காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், ஆயுதப்படை, கமாண்டோ, தமிழ்நாடு சிறப்பு காவல் படை காவல் ஆளிநர்கள் உள்பட 22,000 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பிரதமரின் நிகழ்ச்சிகள் நடைபெறும் சென்னை, பெரியமேடு ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை விமான நிலையம், கிண்டி ஆளுநர் மாளிகை மற்றும் அடையாறு கடற்படை தளம் ஆகிய இடங்களிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், சென்னையில் செல்லும் வழித்தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முதுகெலும்பில்லாத அரசு தேர்தல் குறித்து தம்பட்டம்

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 19

**உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு கூட முதுகெலும்பில்லாத இந்த அரசாங்கம் பொதுத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் என்று தம்பட்டம் அடித்து வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

மோசடி கும்பலொன்று ஆளும் தரப்பு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சேர்ந்து மனித இம்யூனோகுளோபுலின் உள்ளிட்ட ஏராளமான மருந்துகளில் மோசடி செய்துள்ளனர்.

ஆளும் தரப்பு அமைச்சர்கள் ஜனாதிபதியின் பாதுகாப்பில் திருடும் போது கூட ஜனாதிபதி இந்த அமைச்சர்களை வெளியேற்றாது அவர்களை பாதுகாத்துக் கொண்டே வருகின்றது டன் மோசடியில் ஈடுபட்ட சுகாதார அமைச்சரை பாதுகாக்க ஜனாதிபதி முதல் ராஜபக்ச மொட்டுக் குழுவின் கையாட்கள் சகலரும் கை தூக்கி உதவினார்கள்.

மேலும் வியட்நாம் இலங்கையைப் போல் வங்குரோத்தல்லாத வேகமாக அபிவிருத்தி கண்டு வரும் நாடு. இந்த அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிலும் திருட்டுக்கு தண்டனை வழங்கப்படும் போது வங்குரோத்தான நாட்டில் மக்கள் மீது பெரும் வரிச்சுமை சுமத்தப்பட்டு திருட்டு கடத்தல் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நாட்டை அழித்த வங்குரோத்தடையச் செய்த திருடர்களை பிடித்து அவர்கள் திருடிய வளங்களை இந்நாட்டின் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்றவற்றிற்கு ஒதுக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான நோக்கமாகும்-என்றார். (அ)

# இரு வாரங்களில் 6 ஆயிரத்தை நெருங்கிய டெங்கு நோயாளர்!

கொழும்பு, ஜன. 19

நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 5,892 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த டெங்கு நோயாளர்களில் 1,956 பேர் மேல் மாகாணத்திலே பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களில், 1,228 பேர் கொழும்பு மாவட்டத்திலே பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் 86,232 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (அ)

# முதலை இழுத்து சென்ற சிறுவனின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன. 19

களனியில் நீராடச் சென்ற போது முதலை கடித்து காணாமல் போனதாக கூறப்பட்ட பதினொரு வயது சிறுவனின் சடலம் நேற்று முன் தினம் இரவு கண்டுபிடிக்கப்பட்டதாக கடுவெல பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும், உடலின் எந்த பாகமும் காணாமல் போனதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்றும் கடுவெல பொலிஸ் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் என சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கடுவெல வெலவிட்ட புனித அந்தோனி மாவத்தையில் வசித்து வந்த டில்ஷா பிரமோத் பெரேரா என்ற 11 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# வைத்தியர்- சுகாதார ஊழியர் இடையே நடைபெற்ற மோதலால் பெரும் பரபரப்பு!

கொழும்பு, ஜன. 19

கராப்பிட்டிய வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியருக்கும், சுகாதார ஊழியர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல் சம்பவமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து விசேட வைத்தியர்கள் சங்கத்தின் கராப்பிட்டிய கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

கடந்த 16ஆம் திகதி, சுகாதர ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பினால், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் கிரிஷாந்த பெரேராவினால் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது இடையூறு ஏற்பட்டது.

இது தொடர்பில் வைத்திய நிபுணர் பெரேரா உரிய பிரிவுக்கு அறிவித்திருந்தார். இதற்கு எதிராக கடந்த 17ஆம் திகதி சுகாதார பணியாளர்கள் குழுவொன்று வைத்தியர் கிரிஷாந்த பெரேராவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். எனவே குறித்தவிடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம்" இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

# 42 இலட்சம் ரூபா பணம் மோசடி; பெண் அழகுகலை நிபுணர் கைது

கொழும்பு, ஜன. 19

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி 42 இலட்ச ரூபாய் பணத்தினை மோசடி செய்த கொழும்பை சேர்ந்த அழகுக்கலை நிபுணரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தன்னை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதாக ஆசை வார்த்தைகளை கூறி தன்னிடம் இருந்து 42 இலட்ச ரூபாய் பணத்தினை பெற்று, கொழும்பை சேர்ந்த அழகுக் கலை நிபுணர் ஏமாற்றி விட்டார் என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் முறைப்பாடு செய்ததையடுத்து அழகுக கலை நிபுணர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது, அவர் பல்வேறு நபர்களிடமும் மோசடி செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் அவரது தனிப்பட்ட வங்கி கணக்கில் பல கோடி ரூபாய் பண பரிமாற்றங்களும் இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழ்ப்பாண வர்த்தக சந்தையை குழப்புகிறது யாழ். மாநகரசபை

## ஆளுனரிடம் ஏற்பாட்டாளர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாண வர்த்தக சந்தையை குழப்பும் விதமாக யாழ். மாநகர சபை தொழிற்பட்டு வருகிறது, அது தொடர்பில் ஆளுநருக்கு தெரியப்படுத்தி உள்ளோம். ஆளுநரிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காவிடின் அடுத்து வரும் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வர்த்தக சந்தையை நடத்த மாட்டோம் என யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தின் தலைவர் கே. விக்னேஷ் தெரிவித்தார்.

வர்த்தக சந்தை தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

14ஆவது யாழ்ப்பாண வர்த்தக சந்தை எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையில், யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்த்துறை மன்றத்துடன் இணைந்து, வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டை சேவைகள் நிறுவனத்தினால் குறித்த வர்த்தக சந்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வட பகுதியில் உள்ள தொழில் முயற்சியாளர்களின் நன்மைக்காக இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்தோம். இம்முறை 14ஆவது தடவையாகவும் நடத்தவுள்ளோம். இதன் மூலம் வடக்கு தொழில் முயற்சியாளர்களுக்கு உறுதுணையாக இருந்தோம்.

இந்த ஆண்டும் 300 க்கும் மேற்பட்ட காட்சி கூடங்களை அமைத்துள்ளோம். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை எதிர்பார்க்கிறோம்.

இந்த கண்காட்சி ஒரு களியாட்ட நிகழ்வாக இருக்காது. இது தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளோம்.

அதேவேளை மாவட்ட செயலர் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 10 சிறு முயற்சியாளர்களுக்கும், தொழில் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட 10 சிறு முயற்சியாளர்களுக்கும் இலவசமாக காட்சி கூடங்களை வழங்கியுள்ளோம்.

எமது பிரதேசத்திற்கு தேவையானவற்றை இந்த கண்காட்சி ஊடாக அறிமுகப்படுத்தி வருகின்றோம். இம்முறையும் தொழினுட்பங்கள், புதுப்பிக்கதக்க சக்திகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

குறித்த கண்காட்சிக்காக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கி நிற்க போகின்றனர். இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதிகள் , உணவக தொழில் துறை சார்ந்தோருக்கும் நன்மைகள் பயக்கும் என்பதுடன் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலாத் துறை சார்ந்த நன்மைகள் கிடைக்கும்.

இவ்வாறான செயற்பாடுகளை குழப்பும் முகமாக யாழ். மாநகர சபை செயற்படுகின்றமை எமக்கு வருத்தமே.

மாநகர சபைக்கு வேறு நபர்கள் அழுத்தம் கொடுப்பதாக நம்புறோம். இது தொடர்பில் மாவட்ட செயலர் மற்றும் வடமாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்தி உள்ளோம்.

ஆளுநரிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்புறோம். அவ்வாறு பதில் கிடைக்காது விடின் வேறு மாவட்டத்திற்கு, மாற்ற வேண்டிய முடிவை நாங்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)

# கொழும்பில் பல்கலை கல்விசாரா ஊழியர்களின் ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்!

கொழும்பு, ஜன. 19

கொழும்பு ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அருகில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நேற்று வியாழக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டபோதே போராட்டத்தைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், சம்பள முரண்பாடுகளை தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட நேரிடும் என தொழிற் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ)

# மொட்டுக் கட்சியில் இருந்து விலகுவேன்

## சரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 19

**"ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலான விடயங்களுக்கு தமது கட்சி ஆதரவு வழங்குமானால் பொதுஜன பெரமுன வில் இருந்து நிச்சயம் வெளியேறுவேன்."**

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறு ரைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நான் பொதுஜன பெரமுன கட்சியில்தான் இன்னும் இருக் கின்றேன். செயநன்றி கடனுக் காக கட்சியில் தொடர்கின்றேன். மொட்டு கட்சிதான் வேட்பு மனு வழங்கியது. கொழும்பு மாவட்டத்தில் 3 லட்சத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற்றேன். தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை பிடித்தேன். கட்சி வீழ்ந்திருக்கும் நேரத்தில் அதை விட்டுவிட்டு செல்வது நல்ல தல்ல.

எனினும், நாட்டை பிளவு படுத்தும், இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அதேபோல ஒற்றையாட்சிக்கு



எதிரான விடயங்களுக்கு கட்சி நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ ஆதரவு வழங்கி னால் அதன் பின்னர் அங்கு இருக்கமாட்டேன்." - என்றார். (அ)

# மதுபானங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை குறைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஜன. 19

மதுபான உற்பத்தி நிறுவ னங்கள் மதுபானங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை குறைக்குமாறு மதுவரித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மதுபான உற்பத்தி நிறுவ னங்களுக்கும் மதுவரித் திணைக் கள ஆணையாளர் ஜே.எம். குணசிறிக்கும் இடையில் நடை பெற்ற சந்திப்பின் போது இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

வரி அதிகரிப்பு காரணமாக மதுபான விற்பனை வீழ்ச்சிய டைந்துள்ளதாக மதுபான உற்பத்தி நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே வரியை குறைத்து நுகர்வோருக்கு நிவாரணங் களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆண்டுக்கான மதுவரி வருமானமாக 232 பில்லியன் ரூபாவை ஈட்ட முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

உரிய முறையில் வரியை செலுத்துமாறும், போலி மது பான உற்பத்திகளை தடுக்க ஸ்டிக்கர்களை போத்தலில் ஒட்டுமாறும் ஆணையாளர் நாயகம் கோரியுள்ளார்.

மதுவரி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட அனுமதிப்பத்திரங்க ளின் கட்டண அதிகரிப்பு குறித்த வர்த்தமானி அறிவித்தல் தவறுதலாக வெளியிடப்பட் டுள்ளது எனவும், ஜனாதிபதி நாடு திரும்பியதும் இந்த வர்த்தமானி அறிவித்தல் மீள பெற்றுக்கொள்ளப்படும் என வும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பில் காற்று மாசு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 19

இலங்கையில் உள்ள அமெ ரிக்க தூதரகத்தின் காற்றின் தர சுட்டெண் தரவுகளின்படி, நேற்று முன் தினம் காலை கொழும்பு நகரில் காற்று மாசு பாடு கடுமையாக அதிகரித்துள் ளது.

சுட்டெண்ணின் படி, கொழும்பு நகரின் கொள்ளுப் பிட்டி பகுதியைச் சூழவுள்ள காற்றில் உள்ள தூசித் துகள்க ளின் அளவு நேற்று முன் தினம் காலை 163 ஆக அதிகரித்துள் ளது.

கொழும்பு 07 பகுதியில் இந்த எண்ணிக்கை 141 ஆக பதிவாகியுள்ளது. எவ்வாறாயி னும், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் தரவுகளின்படி, அதே எண்ணிக்கை கொழும்பி லும் 78 ஆக பதிவாகியுள்ளது.

மேலும், பதுளை, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய நகரங்க ளைச் சுற்றி வளிமண்டலத்தில் தூசி துகள்களின் சதவீதம் அதி கரித்துள்ளது.

இந்தியாவில் இருந்து வீசும் காற்றின் தாக்கம் காரணமாக இந்த நாட்டில் காற்றின் தரம் குறைந்துள்ளதாக மத்திய சுற்றா டல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர், கழிவு முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்துள் ளார். இதன் காரணமாக சுவா சக் கோளாறு உள்ளவர்கள் முகக் கவசம் அணிவது சிறந்தது என குறிப்பிட்டுள்ளார். (அ)

# பிரதேச சபையின் வாக்குறுதியால் இன்றைய போராட்டம் ஒத்திவைப்பு

## ஒரு மாதத்திற்குள் தீர்த்து வைக்க தவறின் போராட்டம் வெடிக்கும் என வர்த்தக சங்க தலைவர் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 19

பிரதேச சபையின் வாக்குறு தியால் இன்றைய போராட்டம் ஒத்திவைக்கப்படுவதாகவும், ஒரு மாத காலத்திற்குள் எங்கள் பிரச் சனைகளுக்கு தீர்வினை பெற்றுத் தர தவறின் போராட்டம் வெடிக் கும் எனவும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் நவநீதன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர், வர்த்தக சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி ஆகியோருக்கிடையில் நேற்று புதுக்குடியிருப்பு பிரதே சசபையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் சங்கத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்-

கடந்த 16ஆம் திகதி முல் லைத்தீவு ஊடக அமையத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை யின் வேவலைத்திட்டங்கள், செயற்பாடுகள் குறைவடைந்து இருந்தமையால் அது சார்ந்த விடயங்களை நாம் ஊடகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந் தோம்.

அந்தவகையில் எமது கோரிக் கைகளிற்கு அமைவாக இன்றைய தினம் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர், உப செயலாளர் எம்முடன் கலந்து ரையாடி முடிவினை எடுப்ப தற்கு அழைப்பு விடுத்திருந்தார் கள். அதற்கமைய கலந்துரையா டல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின் எங்களால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகளை ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்றி தருவதாக புதுக்குடியிருப்பு பிர தேச சபையினர் எழுத்து மூலம் ஒப்புதல் கடிதம் வழங்கியிருக் கின்றார்கள்.

இந்நிலையில் ஒரு மாத காலப்பகுதிக்குள் நிறைவேற்றி தருவார்கள் என்ற நம்பிக்கை யின் அடிப்படையிலும், எழுத்து மூல ஆவணத்தின் அடிப்படையிலும் இன்று நடத்த இருந்த போராட்டத் தினை இடைநிறுத்தி ஒரு மாத கால அவகாசம் கொடுத்திருக் கின்றோம்.

குறித்த காலப்பகுதிக்குள் பிரச்னைகளை தீர்த்து வைக்க தவறின் நாங்கள் மீண்டும் வர்த் தக சங்கத்தினை ஒன்றுதிரட்டி இவர்களுக்கு எதிரான போராட் டத்தினை நடாத்துவதில் எந்த வித மாற்றமும் இல்லை.

எங்களுக்கு தந்துள்ள வாக்கு றுதிகள் ஒருமாத காலப்பகுதிக் குள் பல மாற்றங்களை ஏற்படுத் தும் என நம்புகின்றோம். ஏனெ னில் கலந்துரையாடல் அவ்வா றானதாகவே அமைந்திருக்கின் றது. ஆதரவு தந்த அனைவருக் கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதாக மேலும் தெரிவித்தார்.

இன்றைய கலந்துரையாட லில் குறித்த விடயங்கள் தொடர் பாக கலந்துரையாடப்பட்டுள் ளதுடன் வர்த்தக சங்கத்தினருக்கு புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளரினால் உத்தரவாதம் வழங்கப்பட்ட விடயங்கள் பின் வருமாறு:-

1) புதுக்குடியிருப்பு சந்தைத் தொகுதியில் ஏற்கனவே நில வாடகையில் வியாபாரம் செய்த 03 வியாபாரிகளுக்கு பிரதேச சபை 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிரந்தர கடைகளை வழங்க முடியாததன் காரணத்தி னால் அவர்களுக்கு பிரதேச சபையின் பொதுச் சந்தையி னுள் உள்ள நிலவாடகை கடை களினை ஒழுங்கமைத்து வியா பாரிகளுக்கு வியாபாரம் முன் னுரிமையான இடத்தில் நில வாடகையில் கடைகளை வழங் குதல் எனத் தீர்மானிக்கப்பட் டது.

2) புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சிறுவர் பூங்காவில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாட்டினை கட்டுப்படுத் துவதற்காக பொலிஸ் பிரிவு மற் றும் வர்த்தகர் சங்கத்தின் ஒத்து ழைப்பு கோரப்பட்டதுடன் அதன் மூலம் குறித்த சட்ட விரோத செயற்பாடுகளை கட் டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

3) புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் பிரதான வாய்க்காலா னது வீதி அபிவிருத்தி திணைக் களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கு உரித்தானதாக காணப்படுகின் றது. எனினும் குறித்த இரு திணைக்களத்தினர் வாய்க்கால் துப்பரவு பணிகளில் ஈடுபடாத விடத்து வெள்ள அபாயத்திலி ருந்து ஏற்படும் விளைவுகளை கருத்திற்கொண்டு பிரதேச சபை மூலம் தேவைப்படுமிடத்து இயந்திர வசதி செய்து கொடுப் பதாக தீர்மானிக்கப்பட்டது.

4) கட்டாக்காலி மாடுக ளினை கட்டுப்படுத்தும் செயற் பாடுகளினை முன்னெடுப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்காத காரணத் தினால் பிரதேச சபை என்ற ரீதி யில் வீதி விபத்துக்களை தவிர்க் கும் முகமாகவும் போது மக்க ளுக்கு ஏற்படும் அசௌகரியங் களை கருத்திற்கொண்டு பிரதேச சபையினால் குறித்த நடவடிக் கைகளை மேற்கொள்ளும் போதும் ஏற்படும் இடர்பாடு களை தவிர்ப்பதற்கும் வர்த்தகர் சங்கம் மற்றும் பொலிஸ் பிரிவு என்பனவற்றின் உதவி கோரப் பட்டது. அவர்களின் ஒத்து ழைப்புடன் குறித்த செயற்பாடு மேலும் வினைத்திறனாக செய் வதற்கு தீர்மானிக்கப்பட்டது. (அ)

# சட்ட விரோத மின் வேலிகளால் 50 காட்டு யானைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 19

விவசாய நிலங்களை பாது காக்கும் வேலிகளுடன் இலங்கை மின்சார சபைக்குரிய மின்கம்பி கள் சட்ட விரோதமாக இணைக் கப்பட்டதன் மூலம் கடந்த 2023ஆம் ஆண்டில் 50 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக இலங்கை மின் சார சபையின் பிரதி பொது முகாமையாளர் கே.ஏ. நோயல் பிரியந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த 2023ஆம் ஆண்டில் பல்வேறு மனித நடவடிக்கைக ளால் 474 காட்டு யானைகள் உயிரிழந்தன.

யானைகளை கொல்வதற் காக மின்சாரத்தை சட்ட விரோ தமாக பயன்படுத்தும் நபர்க ளுக்கு எதிராக மின்சார சபை முன்னதாக சட்ட நடவடிக்கை களை முன்னெடுத்திருந்தது.

நாட்டிலுள்ள யானைகளின் எண்ணிக்கையை பாதுகாக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என இலங்கை மின் சார சபை கேட்டுக்கொள்கிறது.

அதன்படி, பயிர்களை பாதுகாக்கும் வகையில் அமைக் கப்படும் வேலிகளுடன் மின்சார சபைக்கு சொந்தமான மின்கம் பிகளை இணைப்பது தொடர் பில் நேரடியாக முறைப்பாடு செய்ய 1987 என்ற அவசர இலக் கத்தை இலங்கை மின்சார சபை வழங்கியுள்ளது-என்றுள்ளது.

# யால தேசிய பூங்கா மீண்டும் திறப்பு

கொழும்பு, ஜன. 19

வெள்ளம் காரணமாக மூடப் பட்டிருந்த யால தேசிய பூங் காவின் பிரதான நுழைவாயில் பொதுமக்களுக்காக திறக்கப் பட்டுள்ளதாக ஊவா வலய வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உபுல் இந்திரஜித் தெரிவித்துள்ளார்.

யால தேசிய பூங்காவில் சிறு நீர்ப்பாசனத் தொட்டிகள் கசி வால் நுழைவாயில்கள் நீரில் மூழ்கியதைத் தொடர்ந்து அவ சர அனர்த்த நிலைமை பிரகட னப்படுத்தப்பட்டது.பூங்கா விற்குள் உள்ள பிரதான வீதி வலையமைப்பு வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் இராணு வத்தினரால் புனரமைக்கப்பட் டுள்ளதுடன், வீதிகளை திருத் தும் பணிகள் நடைபெற்று வரு கின்றன. (அ)

# தமிழ் வாக்குகளுக்காக இராணுவத்தை காட்டிக் கொடுக்க ஜனாதிபதி முயற்சி!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 19

**ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வாக்குகளை பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் சட்டங்களை இயற்ற முயற்சிக்கிறார். சரத் பொன்சேகாவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் வகையில் உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு எதிரான கீழ்த்தரமான செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னெடுத்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 30 ஷ1 தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கினார். இந்த தீர்மானத்தை நாட்டு மக்களும், பாராளுமன்றமும் அப்போது அறிந்திருக்கவில்லை.

நாட்டுக்கு எதிராக ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்களில் இருந்து விலகுவதாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ராஜபக்ஷர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள்.அந்த வாக்குறுதிகளுக்கு அமைய கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தோற்றுவித்தார்கள்.

இலங்கைக்கு எதிராக



கொண்டு வரப்பட்ட 30 ஷ 1 தீர்மானத்துக்கு இணையனுசரனை வழங்கும் இணக்கப்பாட்டில் இருந்து இலங்கை விலகியுள்ள நிலையில் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களில் பல சட்ட வகிபாகத்துடன் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம்,2017 ஆம் ஆண்டு நாடு கடத்தல் சட்டம்,இழப்பீட்டுக்கான அலுவலக சட்டம், பலவந்தமாக தடுக்கும் சட்டம், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டம் என்பன இயற்றப்பட்டுள்ளன. அண்மையில் பாராளுமன்றத்தில் ஒற்றுமை மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளன.

உண்மையை கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபித்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் சட்ட வரைபுக்கான வர்த்தமானி புதுவருட தினத்தன்று வெளியிடப்பட்டுள்ளன. புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் பணிப்புரைக்கு அமைய 2015 ஆம் ஆண்டு முதல் திருட்டுத்தனமாக இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் வலுப்படுத்தும் வகையில் உண்மையை கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு அமைய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள சாட்சி கட்டளைச் சட்டம் வலுவிழக்கப்படும். இராணுவத்தினருக்கு எதிராக எவர் வேண்டுமானாலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாம். பொய் சாட்சியம் வழங்கலாம்.சரத் பொன்சேகாவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்படுகிறார். ஆச்சரியம் என்னவென்றால். யுத்த வெற்றியை பிரதான தேர்தல் பிரசாரமாக கொள்ளும் ராஜபக்ஷர்கள் இராணுவத்தினருக்கு எதிரான சட்டமூலங்களுக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள். ஆகவே இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும்-என்றார்.

(அ)




# வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்!

வவுனியா, ஜன. 19

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை பல்கலைக்கழக வாயிலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போராட்டத்தின் போது கல்வி சாரா ஊழியர்களின் சம்பள உயர்வை அதிகரிக்க வேண்டும் மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமையில் வாழ்க்கைச் செலவுக்கேற்ப கொடுப்பனவினை வழங்க வேண்டும் என்கின்ற பதாதைகள் ஏந்தி இருந்ததோடு குறித்த போராட்டத்திற்கு அரசாங்கம் பதிலளிக்காவிட்டால் தமது போராட்டமானது வேறு வடிவில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் இல்லை!

கொழும்பு, ஜன. 19

“செத்து மடிந்தாலும் பரவாயில்லை, இனி ஒருபோதும் ராஜபக்சக்களுடன் இணைந்து அரசியல் செய்யப்போவதில்லை.” - என்று சிறி லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

புத்தளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“நாடு வங்குரோத்து அடைந்துள்ளது, அதற்கு நாமும் பொறுப்புகூறவேண்டும். கோட்டாபய ராஜபக்சவுக்காக வாக்குதிரட்டியது கவலையளிக்கின்றது. அவர் உரிய முடிவுகளை எடுக்கவில்லை. எனவே, ராஜபக்சக்களுடன் இனி அரசியல் பயணத்தை தொடரப்போவதில்லை.”

- எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரியங்கர ஜயரத்ன தற்போது, ரணில் ஆதரவு அணியில் இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)



# ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் கடலட்டை பிடித்த 12 பேர் கைது

மன்னார், ஜன. 19

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் சட்ட விரோதமாக இரவு நேர கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்ட 12 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது ஓலைத்தொடுவாய் கடல் பகுதியில், சட்ட விரோதமான முறையில் நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த 12 பேரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது 4 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 968 கடலட்டைகள், 34 சங்குகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மற்றும் சங்குகள், ஏல விற்பனை ஊடாக விற்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# இலங்கை போக்குவரத்து சபையினால் சொகுசு சுற்றுலா பஸ் சேவை அறிமுகம்

கொழும்பு, ஜன. 19

இலங்கை போக்குவரத்து சபையின் 66 வருட வரலாற்றில் முதல் தடவையாக ‘கொலோம்புர கரிகா’ என்ற புதிய சொகுசு சுற்றுலா பஸ் சேவை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள புதிய பஸ்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்த பஸ் சேவையில் முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் உள்ள 07 சுற்றுலா வலயங்கள் உள்ளடக்கப்படவுள்ளது.



இந்த பஸ்களில் பயிற்சி பெற்ற சாரதிகள், நடத்துநர் மற்றும் ஒரு தனிநபரும் பல்வேறு சேவைகளை வழங்குவதற்கு நியமிக்கப்படுவார்கள்.

பஸ் சேவையின் மூலம் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சமய மற்றும் கலாச்சார அடையாளங்களை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதை உறுதிப்படுத்துமாறு அமைச்சர் பந்துல குணவர்தன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(அ)

# விஸா நடைமுறையை இலகுபடுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜன. 19

நாட்டில் விஸா முறையை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று காலை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் நடைபெற் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பல அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

(அ)

# பணி பகிஷ்கரிப்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள்!

அம்பாறை, ஜன. 19

**அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுக்கப்படும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைவாக, பல்கலைக்கழக சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் முன்னெடுத்த ஒருநாள் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ.எம். தாஜுதீன் மற்றும் செயலாளர் எம்.எம்.முஹம்மட் காமில் ஆகியோரது தலைமையில் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் இடம்பெற்றது.**

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக பல்கலைக்கழகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தன. வெள்ளம் ஏற்பட்ட நாள்முதல் கடுமையான சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த குறித்த கல்விசாரா ஊழியர்கள் இன்றைய அனைத்து வகையான பணிகளையும் இடைநிறுத்தி பணி பகிஷ்கரிப்பிலும் பாரிய ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

குறித்த பணி பகிஷ்கரிப்பின் காரணமாக பல்கலைக்கழக வளாகம் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது.




அரசாங்கத்தினால் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைப்பு, மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்காமை, பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாதுள்ள சம்பள அதிகரிப்பை வழங்க கோருதல், அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதிய அதிகரிப்புச் செய்ய வலியுறுத்தல், பல்கலைக்கழகங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பி நிருவாக விடயங்களை சுமுகமாக முன்னெடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளல், பல்கலைக்கழக ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தை சீராக்குதல், இலவச உயர்கல்வி முறைமையை ஒழித்து தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கும் அரசின் சிந்தனைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தல், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளை வேறு தேவைகளுக்கு பயன்டுத்தும் அரசின் எத்தனங்களுக்கு எதிர்ப்பு வெளியிடல், அரசின் செயற்பாடுகள் காரணமாக கல்விமான்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் நாட்டின் கல்விக் கட்டமைப்பில் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க தவறியமை உட்பட பல்வேறு விடயங்களை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

(அ)



# ஆற்றை அண்டிய பகுதிகளில் குப்பை கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு

அம்பாறை, ஜன. 19

கல்முனை பிரதேசத்தில் ஆறுகளை அண்டிய பகுதிகளில் குப்பை கொட்டுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தூர இடங்களில் உள்ளவர்கள் கார்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் கொண்டுவரும் வீட்டு திண்மக் கழிவுகள் இரவு வேளைகளில் ஆற்றோரங்களில் இனந்தெரியாதோரால் வீசப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொட்டப்படும் குப்பைகளை நாய்,மாடு, பூனை ,ஆடு மற்றும் கட்டாக்காலி மாடுகளும் காகங்களும் ஏனைய இடங்களுக்கு பரவச் செய்வதுடன் பிரதேசமெங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாக சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அர்ஸத் காரியப்பர் தெரிவித்தார். (அ)

# பிரான்ஸ் நாட்டு தூதுவரை சந்தித்த முன்னாள் முதல்வர்

அம்பாறை, ஜன. 19

கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் ,மெட்ரோ பொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிபுக்கும் பிரான்ஸ் நாட்டின் தூதுவருக்குமிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.



கொழும்பு தூதுவராலயத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் மெட்ரோ பொலிடன் கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழாவுக்கான அழைப்பிதலையும் சிராஸ் மீராசாஹீப் தூதுவரிடம் கையளித்து நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி வைத்தார். (அ)




# தென்கிழக்கு பல்கலை பொறியியல் பீட மாணவர்கள் சீனாவில் காலநிலை மாற்ற செயலமர்வில் பங்கேற்பு

அம்பாறை, ஜன. 19

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள ஷென்சென் உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் நடைபெறும் “காலநிலை மாற்றத்திற்கான நீர் மேலாண்மை” குளிர்கால செயலமர்வில் பங்கேற்கின்றனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் துறையைச் சேர்ந்த இஷ்கி, விதுசன், ஹேமபிரபா மற்றும் கவுசல்யா ஆகியோர் உள்ளிட்ட 6 நாடுகளில் உள்ள 11 பல்கலைக்கழகங்களில் இருந்து 40 பட்டதாரி மாணவர்கள் இச் செயலமர்விற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச் செயலமர்வு ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று வரை இரண்டு வாரங்களுக்கு இடம்பெறுகின்றது.

நோர்வே, போலந்து, ஜேர்மனி, இலங்கை, மங்கோலியா மற்றும் சீனா ஆகிய ஆறு நாடுகளில் உள்ள 11 உயர்கல்வி நிறுவனங்களில் பேட்னர் நிறுவனமாக, இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், 2011 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

புதிய புதுமையான டிஜிற்றல் கருவிகளைப் பயன்படுத்தி இலங்கையில் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதில் கற்கவும், பகிர்ந்து கொள்ளவும், மாற்றத்தை ஏற்படுத்தவும், இந்த குளிர்கால செயலமர்வானது சர்வதேச அரங்கில் ஒரு வாய்ப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(அ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க ஹரீஸ் எம்.பி நடவடிக்கை

அம்பாறை, ஜன. 19

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வெள்ள நீரை கட்டுப்படுத்த அணைக்கட்டுகளை திறந்தமையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் கிழக்குமாகாண அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்ட பல ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் செய்வதறியாது திணறி வருகிறார்கள். இவர்களுக்கு உரிய நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று கமத்தொழில், வனசீவராசிகள் மற்றும் வளங்கள் வனபாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கலந்துரையாடினார்.



அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் அம்பாறை மாவட்ட விவசாயிகள் வெள்ளத்தினால் அடைந்துள்ள நஷ்டங்கள் தொடர்பில் எடுத்துக் கூறிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ், விவசாய நிலங்கள் வெள்ளத்தில் சிக்குண்டு வேளாண்மை மற்றும் மரக்கறி செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ள விடயங்களையும் விளக்கியதுடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், நீர்ப்பாசன திணைக்கள கட்டுக்கள், அணைகள், கால்வாய்கள் வெள்ளத்தில் சேதமாகியுள்ளத்தால் அவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரை கேட்டுக்கொண்டார்.

அம்பாறை மாவட்ட விவசாயிகளின் பிரச்னைகளை கேட்டறிந்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மிகத்துரித கெதியில் விவசாயிகளுக்கு நஷ்டஈட்டை பெற்றுக்கொடுக்க தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அனைக்கட்டுக்களை புனரமைப்பது தொடர்பில் நீர்ப்பாசன அமைச்சரிடம் கலந்துரையாடி உடனடி தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்களுக்கு உறுதியளித்தார்.

இந்த கூட்டத்தின் போது மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட பிரச்சினைகளையும் பற்றி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அமைச்சருக்கும், அமைச்சின் அதிகாரிகளுக்கும் விளக்கி அந்த மக்களுக்கும் உடனடி தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

ஈழநாடு





## நைஜீரியா படகு விபத்தில் 8 பேர் பலி

அபுஜா, ஜன. 19

வட-மத்திய நைஜீரியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 100 இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நைஜர் மாநிலத்தின் போர்கு மாவட்டத்தில் உள்ள நைஜர் ஆற்றில் பயணிகளை ஏற்றிச் சென்று பயணித்த படகே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த படகு போர்கு பகுதியில் இருந்து கெப்பி பகுதியில் உள்ள சந்தைக்கு பயணிகளை ஏற்றிச் சென்றபோதே அதிக பாரம் தாங்க முடியாமல் நீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகில் அதிக பாரம் ஏற்றப்பட்டதால், வேகமாக வீசிய காற்றின் காரணமாக இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்த படகில் பயணித்த 8 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் 100 பேர் காணாமல் போயுள்ளனர்.

மேலும் காணமல்போனோரை மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் கடந்த ஏழு மாதங்களில் அதிகளவான படகு விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இவ்விபத்தினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# செங்கடல் பகுதியில் அதிகரிக்கும் பதற்றம்

### அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் ‘ஹவுதி படை’

நியூயோர்க், ஜன. 19

செங்கடல் சர்வதேச வணிகப் பாதையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு காரணமாகவுள்ள ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களை (படையை) சர்வதேச பயங்கரவாத குழுவில் அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது.

ஏமன் உள்நாட்டுப் போரில் அந்நாட்டின் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹவுதிகள் ஹமாஸ் களுக்கு ஆதரவாக இஸ்ரேல் துறைமுகத்துக்கு செல்லும் அந்நாட்டுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தின.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவைகளாகும். இதனால் செங்கடல் வணிகப் பாதையில் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா மற்



றம் பிரித்தானியா ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தின.

இந்நிலையில் ஹவுதி பயங்கரவாதிகளை ‘சர்வதேச பயங்கரவாத குழு’ என்று அமெரிக்கா பட்டியலிட்டுள்ளதுடன், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீதான தாக்குதல்களை தொடர்வதாகவும் அறிவித்திருக்கிறது.

ஐரோப்பா - ஆசியா இடையேயான கப்பல் போக்குவரத்தில் 15 சதவீதம் பங்கு வகிக்கும் முக்கிய கடல் வணிகப்பாதையான செங்கடல் பாதையில் இது வரை 27 இற்கும் அதிகமான கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது சர்வதேச அளவில் மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# பதவியில் இருந்து விலகினார் சிங்கப்பூர் அமைச்சர் ஈஸ்வரன்

### அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு

சிங்கப்பூர் சிற்றி, ஜன. 19

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், சிங்கப்பூர் போக்குவரத்து அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

சிங்கப்பூர் வெஸ்ட் கோஸ்ட் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான அவர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் மக்கள் செயல் கட்சியில் இருந்தும் விலகியுள்ளார்.

மேலும், கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் லஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அதுவரை அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பெற்றுக்கொண்ட சம்பளத்தையும் அவர் திருப்பி செலுத்தியுள்ளார்.

சிங்கபூர் பிரதமர் லீ சியன் லூங் நேற்று இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.




கடந்த 2023 ஜூலை 11ஆம் திகதியில் அமைச்சர் ஈஸ்வரன் விடுமுறையில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில், தற்காலிக போக்குவரத்து அமைச்சரான சீ ஹொங் டாட், ஈஸ்வரனுக்குப் பதில் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்படுவார் என சிங்கப்பூர் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் முன்னாள் அமைச்சர் ஈஸ்வரன் நேற்றுக் காலை அந்நாட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார். அவர் இரண்டு ஊழல் குற்றச்சாட்டுகள் உட்பட மொத்தம் 27 குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கி வருவதாக கூறப்படுகிறது. (அ)



## பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இழந்தது தாய்வான் ஆளும் கட்சி!

### அமைச்சரவை பதவி விலகும் என அறிவிப்பு

தாய்பேய், ஜன. 19

தாய்வானின் ஆளும் ஜனநாயக முற்போக்குக் கட்சி பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறியுள்ளதை அடுத்து பிரதமர் உட்பட அமைச்சரவை பதவி விலகி உள்ளது.

தாய்வான் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய புதிய பாராளுமன்றம் கூடும் முன்னர் அமைச்சரவை ராஜினாமா செய்யும் என தாய்வான் பிரதமர் சென் சியென்-ஜென் அறிவித்துள்ளார்.

தாய்வானில் கடந்த 13 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலை அடுத்து புதிய பாராளுமன்றம் எதிர்வரும் பெப்ரவரி 1ஆம் திகதி கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாய்வான் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் ஜனநாயக முற்போக்குக் கட்சி அமோக வெற்றியை பெற்றது. எனினும் பாராளுமன்றத்தில் அந்த கட்சி பெரும்பான்மை பலத்தை இழந்தது.

இந்த நிலையில், தாய்வான் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய புதிய ஜனாதிபதி பிரதமரை நியமிப்பார். அதன் பின்னர், பிரதமர் அமைச்சரவையை நியமிப்பார். (அ)

# ஈரானுக்குப் பதிலடி கொடுத்த பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஜன. 19

ஈரானின் ஏவுகணை தாக்குதலுக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுத்துள்ளது. ஈரான் பாகிஸ்தானின் பாலுசிஸ்தான் மாகாணத்தின் மீது வான்வழித் தாக்கு தல் நடத்தியது இதனால்,பாகிஸ்தான் கடும் ஆத்திரமடைந்துள்ளன.

ஈரான் பகுதியில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது வான்வழித் தாக்குதல்கள் ஆரம்பிக்ககப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானின் இந்த தாக்குதல்களில் மூன்று பெண்களும் நான்கு குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதி மீது நேற்றுமுன்தினம் ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள ஜெய்ஷ்-உல்-அதில் போராளி குழுவின் முகாம்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

பலுசிஸ்தானில் புதன்கிழமை ஈரான் நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டனர். மேலும் மூன்று சிறுமிகள் பலத்த காயமடைந்தனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் இரண்டு ஜெய்ஷ்-உல்- போராளிக் குழுவின் தளங்கள் ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளால் அழிக்கப்பட் டதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர படையினர் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் எல்லையில் தமது படையினர் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாத குழுக்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர படையினர் கூறியுள்ளனர்.

ஈரான் தனது வான்பரப்புக்குள் மேற் கொண்ட இந்த தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள் ளது. பாகிஸ்தானின் இறையாண்மையை மீறுவதை ஏற்க முடியாது என எச்சரித்துள்ளது.



# அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணி சுவீகரிப்பு நடவடிக்கை பொதுமக்களினால் தடுத்து நிறுத்தம்!

முல்லைத்தீவு, ஜன. 19

**முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை தனிநபரிடமிருந்து இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்கான நில அளவீட்டு பணி நேற்று இடம்பெறவிருந்த நிலையில் பொதுமக்களால் குறித்த அளவீட்டு பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.**

முல்லைத்தீவு நில அளவை திணைக்கள அதிகாரிகள் நில அளவீட்டு பணிக்காக துயிலும் இல்ல காணிக்கு சென்றபோது அங்கு கூடிய மக்கள் இந்த இடத்தில் நாம் எமது உறவுகளை புதைத்துள்ளோம் இந்த காணியை அளவிட அனுமதிக்க மாட்டோம் என்றதன் அடிப்படையில் அளவீட்டு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் மக்களுடன் இணைந்து முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் மக்களுடன் கலந்து கொண்டனர். (அ)



# மருதங்கேணி பிரதேச செயலகத்தில் பொங்கல்



வடமராட்சி, ஜன. 19

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் பொங்கல் நிகழ்வு கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சு.பிரபாகரமூர்த்தி தலைமையில் காலை 09.00 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் பிரதேச செயலகத்தின் பணியாளர்கள் அனைவரும் பங்கெடுத்திருந்தனர்.

குறித்த நிகழ்வின் பின் பொங்கல் தின சிறப்பு நிகழ்வாக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும், தனிமனிதன் பெரிதும் மகிழ்ச்சியாக இருப்பது அலுவலக சூழலா அல்லது குடும்ப சூழலா எனும் தலைப்பில் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெற்றது. (அ-2)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்



யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. 'பகிர்ந்துண்டு வாழ்வோம்' என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்திட்டம் நேற்று முன் தினம் புதன்கிழமை சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் இப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ. குமாரசாமி நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கி வைத்துள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில்வாய்ப்பு இழப்புகளைத் தொடர்ந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுகின்ற மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடரின் போது ஆரம்பித்த 'அற்றார் அழிபசி தீர்த்தல்' திட்டத்தைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாளை கன்பராவில் கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு!

கன்பரா, ஜன. 19

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெறவுள்ளது.

கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் சட்டத்தரணி,இலக்கிய ஆர்வலர், எழுத்தாளருமான க. திருவருள் வள்ளல் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ. சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப் பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூல் வெளியாகி உள்ளது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப் பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என் பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூலை 'ஐங்கரன் விக்கினேஸ்வரா' தொகுத்துள்ளார். (அ)

# பொங்கல் விழா கலைநிகழ்ச்சிகள் நாளை

யாழ்ப்பாணம், ஜன. 19

தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்ட வருகின்ற பொங்கல் விழாவின் முதலாவது பகுதியான பொங்கல் வைபவம் கடந்த 15 ஆம் திகதி சிறப்பாக நடந்தேறியது.அதன் இரண்டாவது பகுதியான கலை நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை மாலை யில் இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் ,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கலைநிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம்,திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்களின் பொங்கல் பாடல்கள்,மன்ற நாடகப் பயிலக மாணவர்களின் ' இதுவும் கடந்து போகும்' நாடகம் என்பவற்றுடன் ஜொனி மதுரநாயகம்,தர்மினி றஜீபன் ஆகியோரின் கவிதை நிகழ்வும் இடம் பெறும். (அ)

# நூலக நிறுவனத்தின் பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 19

இலங்கை தமிழ் பேசும் சமூகங்களை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தும் பணியினை மேற்கொண்டு வரும் நூலக நிறுவனத்தின் பொங்கல் நிகழ்வு கடந்த திங்கள் அன்று யாழ்ப்பாணம் சோமசுந்தரம் ஒழுங்கையில் அமைந்துள்ள நூலக நிறுவன தலைமை அலுவலகம் மற்றும் மட்டக்களப்பு அரசடி நூலகத்தில் அமைந்துள்ள பிராந்திய பணிமனை ஆகியவற்றில் சிறப்பாக இடம்பெற்றது.

நூலக நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 19 ஆண்டுகள் பூர்த்தியாகிய நிலையில் 20ஆவது வருடத்தில் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வு நேரடி மற்றும் இணையவழி நிகழ்வாக இடம்பெற்றது. பொங்கல் நிகழ்வில் நூலக நிறுவன பணியாளர்கள், ஆளுகை சபை உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

2005ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட நூலக நிறுவனம் 5,377,707 பக்கங்களுடன் 147,911 ஆவணங்களை இணைய நூலகமாக ஆவணப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. www.noolaham.org எனும் இணைய இணைப்பின் மூலமாக நூலகத்தினை பார்வையிட முடியும். (அ)



## ஜனாதிபதி...

இருக்கும் ஆதரவு மற்றும் விருப்பம் காரணமாக அவர்கள் இந்த கோரிக்கை விடுக்க உள்ளதாக பொதுஜன பெரமுன வின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரே ராவை பொதுஜன பெரமுனவின் ஜனா திபதி வேட்பாளராக நிறுத்த உள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் காரணமாக கட்சியினர் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த கட்சியின் இளம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

ஏதே ஒரு வகையில் தம்மிக்க பெரேரா ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட் டால், எதிர்க்கட்சி பலமடையும் என சுட்டிக்காட்டியுள்ள அவர், இது குறித்து கட்சியின் தலைவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் தம் மிக்க பெரேராவை பொதுஜன பெர முனவின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் கொள்கை ரீதி யான முடிவை கட்சி எடுக்கவில்லை என வும் கூறப்படுகிறது. (அ)

## அனுபவமற்ற...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார நெருக்க டியை தீர்த்து நாட்டை ஸ்திரமான நிலை மைக்கு கொண்டு வருவதற்கான தற்போ தைய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க வுக்கு மீண்டும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

நாங்கள் அரசாங்கத்தை அமைத்து முதல் மூன்று ஆண்டுகள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தோம். கொரோனா காரணமாக எமக்கு இரண்டு ஆண்டுகள் வேலை செய்ய முடியாமல் போனது.

அப்போது நாங்கள் மக்களின் உயிர் களை பாதுகாக்க வேலைகளை செய் தோம்.இதன் பின்னர் போராட்டம் கார ணமாக ஆறு,ஏழு மாதங்கள் வேலை களை செய்ய முடியாமல் போனது.

தற்போதைய ஜனாதிபதி வரவு - செல வுத் திட்டத்தை சமர்பித்த போது கிராம மக்களின் தேவைகளை நிறை வேற்று மாறு கூறினோம்.

இதற்கு அமைய பிரதமர் தலைமை யில் குழு நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் தீர்மானத்திற்கு அமையவே நாங்கள் மாவட்ட இணைப்பு குழுக் களில் பணிகளை செய்து வருகின்றோம்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவதா இல்லையா என்று மொட் டுக்கட்சி இதுவரை தீர்மானிக்கவில்லை.

பிரதேசங்களில் உள்ள மக்களின் பிரச்னைகளை தீர்க்க முடிந்தவர்களை தெரிவு செய்வதற்காகவே பொதுத் தேர்தல் நடத்தப்படுகிறது.

எனினும் ஜனாதிபதி தேர்தல் நாட்டின் தேசிய பிரச்னைகளுக்கு தீர்வுகாண நடத் தப்படுகிறது. உதாரணமாக 2005 ஆம் ஆண்டு போரை முடிவுக்கு கொண்டு வர மகிந்த ராஜபக்ச தெரிவு செய்தார்கள்.

அதேபோல் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த மக்கள் மைதிரிபால சிறி சேனவை தெரிவு செய்தனர்.

அவர் அதனை செய்தாரா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்த கோட்டாபய ராஜபக்ஷவை தெரிவு செய்தனர்.

இந்த நிலையில் நாட்டில் தற்போது இருக்கும் பெரிய பிரச்னை பொருளாதார நெருக்கடி. தற்போது பேசும் தலைவர் கள் அனைவரும் தப்பியோடிய போது, பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க மாத்திரமே பொறுப்பேற் றார்.

இதனால், பொருளாதார நெருக்கடி யில் இருந்து நாட்டை காப்பாற்றி ஸ்திரத் தன்மை ஏற்படுத்த ரணில் விக்ரம சிங்க வுக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என பலரும் நம்புகின்றனர்.

இதன் பின்னர் திருடர்களை பிடிக்கும் நபர்கள், வாய்ப்பேச்சில் வல்லவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கலாம்-என்றார். (அ)

## உகண்டா...

உகண்டாவின் கம்பாலாவில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்க உள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

## 13 பிளஸை...

நியமிக்கப்படும் ஆளுநர் அதற்கு அனுமதி வழங்குவார். அதேபோல பொலிஸ் கொள்கை, காணிக்கொள்கை என்பவற்றையும் செயற்படுத்திக்கொள் ளுங்கள் என்பதே அவரின் உரையின் சாராம்சம்.

விக்னேஸ்வரன் காலத்தில் முதல மைச்சர் நிதியம் உருவாக்கப்பட்டிருந்தா லும் அப்போது இருந்த ஆளுநர் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆளுநர் அனு மதி வழங்காததால்தான் அது மாகாண சபை சட்டமாகவில்லை. ஆனால் இதற்கு தான் இடையூறு விளைவிக்க போவ தில்லை என்பதையே ஜனாதிபதி கூறி யுள்ளார்.

அதேவேளை, மகா மகாவலி அபி விருத்தி அதிகாரசபை சட்டத்தையும் இரத்து செய்வதற்கு முற்படுகின்றார். வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளில் 40 வீதமானவை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தானது. அந்த நிறுவனத்தை இரத்து செய்ய பின்னர், காணிகள் பிரதேச செயலாளருக்கு சென்றுவிடும், பிரதேச செயலாளரை வழிநடத்தும் அதிகாரமும் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுவிட்டால், 13 பிளஸ் எனக் கூறிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. அதிகாரங்கள் சென்றுவிடும் - என்றார். (அ)

## பொலிஸ்...

சரியாகச் செயற்பட்டிருந்தால் சஹாரன் உள்ளிட்டோரை தாக்குதலுக்கு முன்ன தாகவே கைது செய்திருக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொலிஸார் பெரும் தவறை இழைத்துள்ளனர் என் பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கூறினார். (அ)

## ஒக்.18...

முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றச் சாட்டுகளை சுமத்தியுள்ளன.

என்றாலும், தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என் றும் இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனா திபதி அண்மையில் கூறியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்த கோரப்பட்ட நிதியை வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவ தற்கு 10 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நவம்பர் 18ஆம் திகதிக்கு ஒரு மாத்திற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல் கட்சிகள் முன் வைக்கும் கொள்கை பிரகடனங்களுக்கு பொதுவான கட்டமைப்பை தயாரிப்பது குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந் துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பானர் ரோஹன ஹெட்டிஆரச்சி அண்மையில் கூறியிருந்தார்.

எதிர்வரும் தேர்தலில் முதன்முறை யாக வாக்களிக்கும் வாக்காளர்களை இலக்கு வைத்து தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் இணைந்து தற்போது விழிப் புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (அ)

# மர்மப் பொதிக்குள் துப்பாக்கி ரவைகள்!

### புதுக்குடியிருப்பு பொலிஸார் மீட்டனர்



முல்லைத்தீவு, ஜன. 19

புதுக்குடியிருப்பில் மர்மமான இருந்த பொதி ஒன்றினை புதுக்குடி யிருப்பு பொலிஸார் நேற்று மீட்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மல்லிகைத்தீவு காட் டுப் பகுதியில் மர்மமான முறையில் பொதி ஒன்றினை யாரோ விட்டுச்சென் றுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ ாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர் ஹேரத் தலைமையிலான பொலிஸார் விரைந்து சென்று குறித்த பொதியினை மீட்டுள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட பொதியினுள் 37 துப்பாக்கி ரவைகள் 37 மீட்டெடுக் கப்பட்டுள்ளதுடன் குறித்த பொதி தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட் டுள்ளது.

குறித்த இடத்தில் மர்ம பொதியினை விட்டுச்சென்ற நபர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கபெறாத நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணை களை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கராப்பிட்டிய விசேட வைத்தியருக்கு அடுத்த வாரம் வரை விளக்கமறியல்!

கொழும்பு, ஜன. 19

சிற்றூழியர்கள் இருவரை தாக்கிய தாக குற்றம்சாட்டப்பட்ட கராப்பிட்டிய வைத்தியசாலையின் விசேட வைத்தி யரை ஜனவரி 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கராப்பிட்டிய வைத்தியசாலையின் கனிஷ்ட ஊழியர் ஒருவரையும் பெண் ஊழியர் ஒருவரையும் தாக்கியதாக கூறப் படும் புற்றுநோய் பிரிவுக்கு பொறுப் பான விசேட வைத்தியரை காலி பொலி ஸார் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டிருந்த வைத்தியரை பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத் தினர்.

இதனடிப்படையிலேயே இந்த உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஐ.தே.கவினரின்...

இரண்டு மாதங்களுக்கு முன்னரே செய்வதற்கு அக்கட்சி தீர்மானங்களை யும் எடுத்திருந்தது.

என்றாலும், தற்போது குறித்த பொதுக் கூட்டத்தை கால வரையறை யின்றி ஒத்திவைக்கும் தீர்மானத்தை அக்கட்சி நேற்று எடுத்துள்ளது. கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் அவசர வெளிந ாட்டு பயணங்களை மேற்கொள்ளும் சூழல் எழுந்தமையாலேயே இந்த முடிவை அக்கட்சி எடுத்துள்ளது.

ஜனாதிபதியுடன் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, சிரேஷ்ட தலைவர் சாகல ரத்னாயக்க உள்ளிட்டோரும் சுவிட்சர்லாந்து மற்றும் உகண்டா பயணத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இன்று நடைபெறவிருந்த பொதுக் கூட்டத்தில் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அறிவிக்கும் பணிகளை ஐ.தே.க மேற்கொண்டிருந் தது. என்றாலும், தற்போது அந்த பணி கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.தே.க மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் இணைந்து பரந்தப்பட்ட கூட்டணி யொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஆளுங்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. (அ)

## ரணிலே...

பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியு மான மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கோட்டை அம்பாந்தோட்டை மாவட் டமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராக களமிறங்க வேண் டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் செயற்குழு என்பனவும் தீர்மானம் நிறைவேற்றியுள் ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்.ராணியுடன்...

குறித்த விபத்தில் முறிகண்டி பகு தியை சேர்ந்த 43 வயதுடைய கேதீஸ் வரன் விஜயானந்தன் எனும் 2 பிள்ளை களின் தந்தையான ரிப்பர் சாரதியே உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் உயிரிழந்த நபரின் சடலம் ரயில் அதிகாரிகளால் கிளி நொச்சி ரயில் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டது.

பின்னர் குறித்த சடலம் ரயில் நிலைய அதிகாரிகளால் கிளிநொச்சி வைத்திய சாலையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu

# விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

## கொக்குவிலில் பல வீடுகளுக்கு நேற்று சிவப்பு எச்சரிக்கை





**யாழ்ப்பாணம், ஜன. 19**

**யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நேரடி பங்கேற்புடன் குறித்த டெங்கு ஒழிப்பு வேலை திட்டமானது முன்னெடுக்கப்படுகிறது.

கொக்குவில் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டதோடு வீடுகளில் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்கள் அகற்றப்பட்டதோடு பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன. (அ)

# தம்மிக்க பெரேராவுடன் உடன்பாடு எதுவுமில்லை

### கூறுகிறார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எந்தவொரு உடன்பாடும் செய்துகொள்ளப்படவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அனுபவமற்ற ஜனாதிபதியை நியமித்து நாட்டை மீண்டும் சிக்கலில் தள்ள முடியாது எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார்.

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

நான் பொதுஜன பெரமுனவின் அங்கத்தவர். எனக்குத் தெரிந்தவரையில் தம்மிக்க பெரேராவுடன் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுன எந்தவொரு உடன்படிக்கையையும் மேற்கொள்ள வில்லை.

ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் பொதுஜன பெரமுன இன்னும் தீர்மானம் எடுக்க வில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு பொதுஜன பெரமுன மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.“ எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா முயற்சிகளை எடுத்துவரும் பின்புலத்திலேயே பிரசன்ன ரணதுங்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (அ)

# விவசாயம் செய்யுங்கள்!

### மீனவர்களுக்கு டக்ளஸ் ஆலோசனை

கொழும்பு, ஜன. 19

நாட்டின் நிலையை உணர்ந்து ஓரிரு தடவைக்கு பின்பும் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்க கூடாது எனவும் விவசாயத்திலும் மீனவர்கள் ஈடுபட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

நன்னீர் மீனவர்களின் தேவைகள் தொடர்பில் அறிந்து கொள்ளும் கலந்துரையாடல் கிளிநொச்சியில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிட்டத்தட்ட 7 சங்கங்கள் இங்கு வந்து தேவைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்துள்ளீர்கள். உங்களுடைய தேவைகள், பிரச்னைகளை தீர்ப்பதுதான் எங்களுடைய நோக்கம்.

நாடு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புள்ளாகியுள்ளது. கடந்தகாலத்தில் உங்களிற்கு செய்யப்பட்ட வேலைகளிலிருந்து குறைவுபட்டதாகதான் இருக்கும்.

எவ்வாறாயினும் குறிப்பிடத்தக்க தடவைகளிற்கு மானியமாக அல்லது அரைமானியமாக உங்களிற்கு தருவதற்கு யோசித்து வருகிறோம். புதுமுறிப்பில் உள்ள 10 தொட்டிகளில் 5 தொட்டிகளில் மீன் குஞ்சுகளை வளர்ந்துள்ளோம். மற்ற 5 தொட்டிகளிலும் வளர்க்க உள்ளோம்.

இன்று குறித்த தொட்டிகளிலிருந்து பெறப்பட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் மீன் குஞ்சுகளை ஊற்றுப்புலம் குளத்தில் விட்டுள்ளோம். உங்கள் நம்பிக்கைகள் வீண் போகாத வகையில் உங்களது வாழ்வாதாரங்களை பாதுகாத்து, அதனை வளர்த்தெடுக்கும் வகையில் எமது நடவடிக்கைகள் இருக்கும்.

நீங்களும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் ஊர்கூடி தேர் இழுப்பது போல் சிறந்த பெறுபேறுகளை தரும்.

ஓரிரு தடவைக்கு பின்பு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்க கூடாது. ஆரம்பிப்பதற்காக நாங்கள் ஏதோவொரு வகையில் செய்து தருவோம்.

6 மாதம் குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் நீங்கள் மற்ற 6 மாதம் விவசாயத்திலும் ஈடுபடுவதன் மூலமே உங்கள் வாழ்வாதாரம் உயரும் என நம்புகிறேன்.

உங்களுக்கு மீன்குஞ்சுகள் மற்றும் இறால் குஞ்சுகளை ஓரிரு கட்டங்களில் எவ்வாறு தருகின்றோமோ, அதே போல் வீட்டுத் தோட்டத்திற்கான உதவிகளையும் முதல் கட்டமாக தருவதற்கு தயாராக இருக்கிறோம். விவசாயம் செய்வதற்கான காணிகள் உள்ளிட்ட தேவைகள் இருந்தால் அவ்வந்த சங்கங்கள் ஊடாக எமக்கு விண்ணப்பியுங்கள்.

கடந்தகால அரசியல் இருந்தவற்றை அழித்துக் கொண்டு போனதேயன்றி, இருக்கிறதை பாதுகாத்து முன்னோக்கி போவதாக இருக்கவில்லை. இருப்பதை பாதுகாத்து முன்னோக்கி போவதே என்னுடைய அரசியல் - என்றார்.

# அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் மேலும் 3 இலட்சம் குடும்பங்கள்!

கொழும்பு, ஜன. 19

அஸ்வெசும திட்டத்தில் மேலும் 3 இலட்சம் குடும்பங்களை உள்ளீர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6 இலட்சத்து 40 ஆயிரம் அஸ்வெசும மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இதற்கமைவாக, அஸ்வெசும கொடுப்பனவை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 17 இலட்சத்தை தாண்டியுள்ளதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் காரணமாக இதுவரை அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொண்ட 5,209 குடும்பங்கள், அந்த சலுகையை இழந்துள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த தவணைக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்னர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, எதிர்வரும் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான தவணைக் கொடுப்பனவை கூடிய விரைவில் வங்கிகளுக்கு விடுவிக்கவுள்ளதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

சுமார் 11 இலட்சம் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றை கூடிய விரைவில் மீளாய்வு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நலன்புரி நன்மைகள் சபை உறுப்பினர்களுடன் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே பதில் நிதியமைச்சர் இந்த விடயங்களை கூறினார். (அ)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த முன்னெடுக்கப்படுவதுடன் அடையாளமாக நண்பகல் 12மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக் கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம், “பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்னைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு” எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டத்தில் ஈடுபட்டனர்.




# களுத்துறை சிறையில் மற்றுமொரு கைதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 19

களுத்துறை சிறைச்சாலையில் மற்றுமொரு கைதி உயிரிழந்துள்ளதாக வடக்கு களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பாணந்துறை, மோதரவெல பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடையவராவார்.

இவர் கடந்த 14 ஆம் திகதி சுகயீனம் காரணமாக களுத்துறை நாகொடை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 9ஆம் திகதி ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டு பாணந்துறை நீதிவான் நிதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து நீதிமன்ற உத்தரவின் படி களுத்துறை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வடக்கு களுத்துறை பொலிஸ் பரிசோதகர் தமித் ஜயதிலகவின் அறிவுரைக்கு அமைய சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் 4 நாட்களில் மூன்று கைதிகள் சுகயீனம் காரணமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# விராட் கோலியின் மோசமானசாதனை

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில், இந்திய துடுப்பாட்ட வீரர்களில் அதிக முறை டக் அவுட் ஆன வீரர் என்ற மோசமான சாதனையை விராட் கோஹ்லி படைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் 3 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்றது.

இதில் நேற்று முன் தினம் நடைபெற்ற கடைசி ரி - 20 போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, ரோஹித் சர்மாவின் அதிரடி சதத்தால் 212 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 213 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியும் 212 ஓட்டங்கள் அடிக்க ஆட்டம் சமன் ஆனது.

இதனால் வெற்றியை தீர்மானிக்க சூப்பர் ஓவர் கடைபிடிக்கப்பட்டது.

இதில் முதல் சூப்பர் ஓவர் சமனில் முடிவடைந்ததால், தொடர்ந்து 2-வது சூப்பர் ஓவர் வீசப்பட்டது. 2 ஆவது சூப்பர் ஓவரில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி சந்தித்த முதல் பந்திலேயே டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விராட் கோஹ்லி டக் அவுட் ஆவது இது 35-வது முறையாகும். இதன் மூலம் இந்திய துடுப்பாட்ட வீரர்களில் அதிக முறை டக் அவுட் ஆன வீரர் என்ற மோசமான சாதனையை விராட் கோஹ்லி படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்த பட்டியலில் இந்திய முன்னாள் வீரர் சச்சினுடன் சமனில் இருந்த கோஹ்லி தற்போது அவரை முந்தி மோசமான சாதனையை படைத்துள்ளார்.

1. விராட் கோலி - 35 முறை 2. சச்சின் - 34 முறை 3. ரோஹித் சர்மா - 33 முறை

மேலும் சர்வதேச ரி - 20 போட்டிகளில் விராட் கோஹ்லி, தான் சந்தித்தமுதல் பந்திலேயே அவுட் ஆவது (கோல்டன் டக்) இதுவே முதல் முறையாகும்.

# முன்னணி நட்சத்திரத்தை வீழ்த்திய இளம் வீராங்கனை



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் 16 வயது இளம் வீராங்கனையான மிர்ரா ஆண்ட்ரீவா, ஆறாவது நிலை வீராங்கனையான ஒன்ஸ் ஜபியூரை 6-0 6-2 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

இதன் மூலம் அவர் அவுஸ்திரேலிய ஓபன் மூன்றாவது சுற்றை எட்டியதுடன், தனது தொழில் வாழ்க்கையின் முதல் டாப்-10 வெற்றியை பதிவு செய்தார்.

புதன்கிழமை நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபனின் இரண்டாவத சுற்று ஆட்டத்தில் துனிஷிய வீராங்கனையான ஒன்ஸ் ஜபீர் அட்டகாசமான ஆரம்பத்துடன் போட்டியை தொடங்கினார்.

எனினும் இளம் ரஷ்ய வீராங்கனையான மிர்ரா ஆண்ட்ரீவா, ஒன்ஸ் ஜபீருக்கு போட்டியின் இறுதியில் அதிர்ச்சி அளித்தார்.

# உலக சாம்பியனை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா!




நெதர்லாந்தில் நடைபெறும் செஸ் போட்டியில், உலக சாம்பியனை வீழ்த்தியுள்ளார் பிரக்ஞானந்தா.

நெதர்லாந்து நாட்டில் உள்ள விஜ்க்ஆன் ஜீ நகரில் டாடா ஸ்டீல் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் 4ஆவது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான இந்தியாவின் ஆர்.பிரக்ஞானந்தா, உலக சாம்பியனான சீனாவின் டிங் லிரனுடன் மோதினார்.

இதில் கருப்பு நிறகாய்களுடன் விளையாடிய பிரக்ஞானந்தா 62-வது காய் நகர்த்தலின் போது வெற்றி பெற்றார்.


இதன் மூலம் நடப்பு சாம்பியனை வீழ்த்திய 2-வது இந்திய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் 18 வயதான பிரக்ஞானந்தா.

இதற்கு முன்னர் இந்த சாதனையை 5 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த் நிகழ்த்தியிருந்தார். டிங் லிரனை வீழ்த்திய பிரக்ஞானந்தா, சர்வதேச செஸ் கூட்டமைப்பின் (ஃபிடே)லைவ் ரேட்டிங்கில் 2 இடங்கள் முன்னேறியதுடன் 2748.3 புள்ளிகளுடன் இரு இடங்கள் முன்னேறி 11-வது இடத்தை பிடித்துள்ளார்.

அதேவேளையில் விஸ்வநாதன் ஆனந்த் 2748 புள்ளிகளுடன் ஓர் இடம் பின்தங்கி 12-வது இடத்தில் உள்ளார்.

## முதல் பந்திலேயே ஸ்டீவ் ஸ்மித்தின் விக்கெட்

# மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர் சமர் ஜோசப்பின் கனவுப்பயணம் ஆரம்பம்






சிலருக்கு முதல்போட்டி என்பது கனவுபோல அமைவதுண்டு மேற்கிந்திய அணியின் சகலதுறை வீரர் சம்மெர் ஜோசப்பின் முதல் போட்டியும் ஒரு கனவே.

முதலில் அவரின் ஆரம்பம் - கயானாவின் 350 பேரை கொண்ட பராகரா என்ற ஊரிலிருந்து மேற்கிந் திய தீவுகள் அணிக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் வீரர் இவர்.

அதன் பின்னர் அவர் தனது முதல் டெஸ்டில் மேற்கிந்திய அணியின் அதிக ஓட்டங்களை பெற்ற 11 வீரர் என்ற சாதனையை முறியடித்தார்,36 ஓட்டங்களை அவர்பெற்றார் அதில் ஜோஸ் ஹசெல்வூட்டின் பந்தில் பெறப்பட்ட சிக்சரும் அடங்கும்.

அதன் பின்னர் தனது பந்து வீச்சை ஆரம்பித்த வேளை டெஸ்ட்போட்டிகளில் முதல் பந்தில் விக்கெட்டை வீழ்த்திய 23 வீரர் - மேற்கிந்திய அணியின் இரண்டாவது வீரர் என்ற சாதனைபட்டியலில் அவர் தனது பெயரை பதிவு செய்துகொண்டார்.

முதல் பந்தில் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பதுடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ஸ்டீவ் ஸ்மித்தின் விக்கெட்டை வீழ்த்தினார்.

ஸ்டீவ்ஸ்மித்தினை முதலாவது பந்தில் ஆட்டமிழக்க செய்ததை வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருப்பேன் என சாமர் ஜோசப் முதல்நாள் நிறைவின் பின்னர் தெரிவித்தார்.

நான் அதனை படமெடுத்து எனது வீட்டில் ஒட்டி வைப்பேன் என்றார் அவர்.

தனது முதல் பந்தில் விக்கெட்டை வீழ்த்துவேன் என அவர் தனது அணியினரிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் அது ஸ்டீவ் ஸ்மித்தின் விக்கெட் என நான் எதிர்பார்க்கவில்லை. அது எனக்கு பெரும் உந்துசக்தியாக அமைந்தது. நான் மிகவும் சாதகமான மனோநிலையுடன் விளையாடினேன். உலகின் தலைசிறந்த அணியுடன் விளையாடும்போது சாதகமான மனோநிலை அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

முதல் இனிங்சில் மேற்கிந்திய அணி 188 ஓட்டங்களிற்கு ஆட்டமிழந்ததை தொடர்ந்து அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

அவுஸ்திரேலிய அணி 25 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை ஜோசப் பந்து வீச ஆரம்பித்தார் - அவ்வேளை ஸமித் இரண்டு பவுண்டரிகளுடன் நிதானமாக துடுப்பெடுத்தாடிக்கொண்டிரு ந்தார்.கெமரோச் அல்சாரி ஜோசப் போன்றவர்களின் பந்து வீச்சு சவாலாகயிருக்கவில்லை.

முதல் பந்தை வீசுவதற்காக ஓடிவந்த ஜோசப் ஆனால் அவரது ஓட்டத்தை நிறுத்திக்கொண்டு மீண்டும் பந்து வீச ஆரம்பித்தார்.

ஒவ்ஸ்டம்பிற்கு வெளியே 137 கிலோமீற்றர் வேகம் ஸ்மித் தடுமாறினார் துடுப்பை உரசிக்கொண்டு சென்ற பந்து ஸ்லிப்பை நோக்கி சென்றது மூன்றாவது ஸ்லிப்பில் நின்றிருந்த ஜஸ்டின் கிரீவ்ஸ் இவரும் முதல் டெஸ்டில் விளையாடுகின்றார் அந்த பிடியை எடுத்தார்.

நான் முதல் பந்திற்காக ஓடியவேளை பதற்றமாக உணர்ந்தேன்ற்ற. அதன் காரணமாகவே இடையில் நின்று மீண்டும் திரும்பி வந்து பந்து வீசினேன். மீண்டும் முதல்பந்திற்காக எனது மனதை உறுதியாக்கி கொண்டு வந்து பந்துவீசினேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் ஸடீவ்ஸ்மித் துடுப்பெடுத்தாடுவதை வீடியோக்கள் மூலம் அவதானித்துள்ளேன். அவர் ஓவ்ஸ்டம்பிற்கு வெளியே பலவீனமானவர் என்பதை உணர்ந்தேன். அவர் அங்கும் இங்கும் திரும்பும் ஒருவர் என்பதால் ஒவ்ஸ்டம்பிற்கு மேலே பந்தை வீச தீர்மானித்தேன். அதேபோல் பந்து வீசினேன். பந்து சிறியளவு ஸ்விங் ஆனது துடுப்பின் நுனியில் பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# பாகிஸ்தானில் ஈரான் ராணுவம் ஏவுகணை தாக்குதல் ஏன்?

# இரு நாடுகளிடையே என்ன நடக்கிறது?



கடந்த செவ்வாய்க்கிழமை அன்று, அண்டை நாடான ஈரான் நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டதாகவும் மேலும் மூன்று பேர் காயமடைந்ததாகவும் பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஜெய்ஷ் அல்-அட்ல் என்ற தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய இரண்டு தளங்களைக் குறி வைத்ததாக ஈரான் கூறியதாக அந்நாட்டு ராணுவத்துடன் தொடர்புடைய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால், பாகிஸ்தான் இதை நிராகரித்துள்ளது. இது "கடுமையான விளைவுகளுக்கு" வழிவகுக்கும் "சட்டவிரோத செயல்" என்று கூறியது.

ஈராக் மற்றும் சிரியாவுக்கு அடுத்த படியாக கடந்த சில நாட்களில் ஈரானின் தாக்குதலுக்கு உள்ளான மூன்றாவது நாடு பாகிஸ்தான்.

பாகிஸ்தான் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் முன்னெப்போதும் இல்லாதது. செவ்வாய்க்கிழமை தாக்குதல் இரு நாடுகளின் எல்லையான பலுசிஸ்தானின் பரந்த தென்மேற்கு மாகாணத்தில் இருக்கும் ஒரு கிராமத்தைத் தாக்கியது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம், "ஈரான் தனது வான்வெளியில் தூண்டுதலின்றி அத்துமீறி நுழைந்ததை" கடுமையாகக் கண்டித்துள்ளது.

அத்துடன், ஈரானுக்கான தூதரை பாகிஸ்தான் திரும்பப் பெற்றுள்ளது. தற்போது ஈரான் சென்றுள்ள பாகிஸ்தானுக்கான ஈரான் தூதர் மீண்டும் பணிக்கு தனது நாட்டிற்கு வர முடியாது என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தை "முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்றும் கூறியது. "பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கு இடையே பல தகவல்தொடர்பு சேனல்கள் இருந்த போதிலும் இந்த சட்டவிரோத செயல் நடந்துள்ளது நிலைமையை மேலும் தீவிரமாக்குவதாகவும்" கூறியுள்ளது.

ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் உள்ள ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவரிடம் பாகிஸ்தான் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. மேலும், "பாகிஸ்தானின் இறையாண்மை மீதான இந்த அப்பட்டமான மீறல் மற்றும் அதன் விளைவுகளுக்கு ஈரானே பொறுப்பு," என்றும் கூறியுள்ளது.

### இரு நாடுகளிடையே என்ன நடக்கிறது?

ஈரான் திங்கட்கிழமை இரவு, வடக்கு ஈராக்கில் உள்ள நகரமான இர்பிலில் உள்ள இலக்குகளை குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடங்கியது. இதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்தது.

காஸா நிலப்பகுதியில் இஸ்ரேலுக்கும் ஈரான் ஆதரவு பெற்றா பாலத்தீனிய குழுவான ஹமாஸ் இடையே அக்டோபர் 7ம் தேதி போர் தொடங்கியதில் இருந்து, மத்திய கிழக்கு முழுவதும் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் ஈரானின் தாக்குதல்கள் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.




மோதல்களை பெரிதாக்குவதில் ஈடுபட விரும்பவில்லை என்று ஈரான் அறிவித்திருந்தாலும், அதன் "எதிர்ப்பு அச்சு" என்று அழைக்கப்படும் குழுக்கள் பாலத்தீனியர்களுடன் ஒற்றுமை காட்ட இஸ்ரேலுக்கும் அதன் கூட்டணி நாடுகளுக்கும் எதிராக தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கம் இஸ்ரேலிய படைகளுடன் எல்லை தாண்டிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது, ஷியா போராளிகள் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். ஏமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் உள்ள கப்பல்களைத் தாக்கியுள்ளனர்.

ஹமாஸ் தலைவரை லெபனானில் நடத்திய தாக்குதலில் கொன்றுள்ளது இஸ்ரேல். புரட்சிகர காவலர் தளபதி சிரியாவில் நடத்தப்பட்ட இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில் ஈராக் மீதான விமானத் தாக்குதலில் ஈராக் போராளிகள் தலைவரை அமெரிக்கா கொன்றுள்ளது. மேலும், ஏமனில் ஹூத்தி இலக்குகள் மீதும் அமெரிக்கா குண்டு வீசியுள்ளது.

பல காலமாகவே, பாகிஸ்தானும் ஈரானும், ஜெய்ஷ்-அல்-அத்ல் உள்ளிட்ட ஆயுதம் தாங்கிய பிரிவினைவாத குழுக்களை எதிர்த்து, மக்கள் தொகை குறைவான இந்த எல்லைப் பகுதியில் போராடி வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையே சுமார் 900 கி.மீ நீளமுள்ள எல்லைப் பகுதியில் பாதுகாப்பு என்பது இரு அரசுகளுக்கும் நீண்ட காலமாக கவலையாகவே இருந்து வருகிறது.



கடந்த மாதம் எல்லைக்கு அருகே நடந்த தாக்குதல்களுக்கு ஜெய்ஷ்-அல்-அத்ல் குழுவை காரணமாக ஈரான் கூறுகிறது. இந்த தாக்குதல்களில் பல ஈரானிய காவல் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

அப்போது, ஈரானின் உள்துறை அமைச்சர் அஹ்மத் வஹீடி, இந்த தாக்குதல்களுக்கு காரணமான போராளிகள் பாகிஸ்தானில் இருந்துதான் தங்கள் நாட்டிற்குள் நுழைந்ததாகக் கூறினார்.

அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநரின் அலுவலகத்தின் தகவலின்படி, ஜெய்ஷ்-அல்-அத்ல் சிஸ்தான்-பலுசிஸ்தானில் இயங்கும் "மிகவும் தீவிரமான மற்றும் செல்வாக்குமிக்க" சுன்னி போராளி குழு ஆகும்.

### ஈரான் குறி வைத்த தீவிரவாத குழுவின் பின்னணி என்ன?

ஈரான் மற்றும் பாகிஸ்தான் கடற்படைகள், ஹோர்முஸ் ஜலசந்தி மற்றும் பாரசீக வளைகுடாவில் ஒரு நாள் ராணுவப் பயிற்சியை நடத்தியதாக ஜனவரி 16 அன்று இஸ்லாமிய ரிபப்லிக் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

போர்ப் படகுகள் மற்றும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட போர்க் கப்பல்கள் அப்பயிற்சியில் பங்கேற்றதாக ஐ.ஆர்.என்.ஏ தனது அறிக்கையில் தெரிவித்தது.

அந்த அறிக்கையின்படி, அவசரகால சூழ்நிலைகளில் படைகளின் சூழ்ச்சிகள் மற்றும் தகவல்தொடர்புகளை ஒத்திகை செய்து பார்ப்பதே பயிற்சியின் நோக்கமாக இருந்தது.

ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம், இஸ்லாமிய புரட்சிக் காவல் படை (IRGC) பாகிஸ்தான் எல்லைக்குள் இருக்கும் சுன்னி தீவிரவாதியான ஜெய்ஷ் அல்-அட்ல் குழுவின் தலைமையகத்தைத் தாக்கியதாக ஈரானிய நிறுவனங்கள் தெரிவித்த சில மணிநேரங்களில் இந்த ராணுவ ஒத்திகை பற்றிய அறிக்கை வெளிவந்தது.

இந்தக் குழு ஈரான் தலைநகரான தெஹ்ரானை எதிர்க்கிறது மற்றும் ஈரானிலிருக்கும் பலுச் சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக போராடுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

### ஈரானுக்கான பாகிஸ்தான் தூதர் வாபஸ்

ஈரான் தாக்குதல் எதிரொலியாக அந்நாட்டிற்கான தூதரை பாகிஸ்தான் திரும்பப் பெற்றுள்ளது. அத்துடன், தற்போது ஈரான் சென்றுள்ள பாகிஸ்தானுக்கான ஈரான் தூதர் மீண்டும் பணிக்கு தனது நாட்டிற்கு வர முடியாது என்றும் பாகிஸ்தான் கூறியுள்ளது.

இதுதொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஈரானால் பாகிஸ்தானின் இறையாண்மை அப்பட்டமாக மீறப்பட்டிருப்பது சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. சாசனத்தின் நோக்கங்கள், கொள்கைகளை மீறுவதாகும்.

இந்த சட்டவிரோத செயல் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அதில் எந்த நியாயமும் இல்லை. இந்த சட்டவிரோத செயலுக்கு பதிலடி கொடுக்கும் உரிமை பாகிஸ்தானுக்கு உள்ளது. விளைவுகளுக்கான பொறுப்பு ஈரானிடம்தான் இருக்கும்.

இந்த செய்தியை ஈரான் அரசுக்கு தெரிவித்துள்ளோம். ஈரானில் உள்ள தூதரை திரும்பப் பெற பாகிஸ்தான் முடிவு செய்திருப்பதையும், ஈரான் சென்றுள்ள பாகிஸ்தானுக்கான ஈரான் தூதர் தற்போதைக்கு திரும்ப முடியாது என்பதையும் அவர்களிடம் தெரியப்படுத்தியுள்ளோம். வரும் நாட்களில் பாகிஸ்தான் - ஈரான் இடையே நடந்து கொண்டிருந்த அல்லது திட்டமிடப்பட்ட அனைத்து உயர்மட்டப் பயணங்களையும் நிறுத்தவும் முடிவு செய்துள்ளோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# தேசிய உறவுகளிலும் சர்வதேச உறவுகளிலும் அரசாங்கத்தின் நடத்தை ஒழுக்கமுறைமையின் அடிப்படையில் அமையவேண்டும்!



கலாநிதி ஜெகான் பெரேரா

மற்றையவர்களின் நல்வாழ்வு பற்றி அக்கறை கொள்வதும் பொது நன்மையை உறுதிசெய்வதுமே ஒழுக்க முறைமை அல்லது நீதிநெறி எனப்படுகிறது. அதன் அடிப்படையில் அரசாங்கம் பணியாற்ற வேண்டியது அவசியம். “எம்மைப் போன்றே அயலவர்களையும் நேசிப்பது மனித சமூகத்தை ஒழுங்கமைக்கும் ஒரு உண்மையாகும். அது மாத்திரமே சமூக ஒழுக்க முறைமையில் சகல விவகாரங்களையும் தீர்மானிக்கும்” என்று தத்துவஞானி ஜோன் லொக் கூறினார்.

அரசாங்கம் பொது நன்மையின் அடிப்படையில் அல்ல, பொருளாதார வெற்றியின் அடிப்படையில் அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்துகிறது. அரசாங்கம் அதன் வருமான இலக்குகளை அடைவதில் காணும் வெற்றியை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியிருக்கிறது.

“நெருக்கடிக்கான காரணங்களைக் கையாளுவதற்கு தேவையான வருவாயை நீங்கள் சேகரிக்கிறீர்கள். அது உண்மையில் நல்ல செய்தி”என்று இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் புரூவர் குறிப்பிட்டார்.

சில தரப்பினரை குறிப்பாக நாட்டின் இன்றைய இடர்மிகு நிலைக்கு பொறுப்பானவர்களை தவிர்த்து பலருக்கு துயரைக் கொடுக்கக்கூடிய வழிமுறைகளில் அரசாங்கம் வருவாயை சேகரிப்பதே பிரச்சினையாகும்.

பிரதானமாக மக்கள் மீது வரிகளைச் சுமத்துவதன் மூலம் அரசாங்கம் அதன் நிதிக் கடப்பாடுகளை நிறைவேற்றுகிறது. அந்த மக்களில் பலர் (சனத்தொகையில் கால்வாசிக்கும் அதிகமானவர்கள்) வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள். அவர்களில் குறிப்பாக தொலைதூர கிராமப்புறங்களில் வாழ்பவர்களின் பிள்ளைகள் கடுமையான மந்தபோசாக்கினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பல்வேறு வழிமுறைகளின் ஊடாக வரி வலை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. 18 வயதுக்கு மேற்பட்ட சகலரும் வரி இலக்கம் ஒன்றுக்காக தங்களை பதிவுசெய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். வரியைச் செலுத்துவது குறித்து முன்னர் ஒருபோதும் சிந்திக்காத பஸ் சாரதிகள் போன்ற குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் கூட இந்த வரிவலைக்குள் அகப்படுகிறார்கள்.

தனிப்பட்ட வரிவீதங்கள் கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. உயர்ந்த வருமானம் பெறும் பிரிவினருக்கான வரி மட்டங்கள் இரண்டு மடங்காக, மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

மக்களில் சில பிரிவினருக்கு இந்த வரிகளைச் செலுத்துவது கட்டுப்படியாகும் என்கிற அதேவேளை அவர்களும் கூட தங்களது சேமிப்புகளில் இருந்து அல்லது வேறு செலவினங்களைக் குறைப்பதில் இருந்து கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்தியே வரிகளைச் செலுத்தவேண்டியிருக்கிறது.

பெறுமதிசேர் வரியின் (வற்) மூலமாக முழு சனத்தொகையிடம் இருந்தும் பெருமளவு வரி வருவாயைப் பெறுவது சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை எட்டுவதில் அரசாங்கத்தின் சாதனையின் எதிர்மறையான பக்கமாகும். வருமானத்தையும் கொள்வனவுச் சக்தியையும் பொருட்படுத்தாமல் மக்களில் சகல மட்டத்தினராலும் வற் வரி செலுத்தப்படவேண்டியதாக இருக்கிறது.

பணக்காரர்களை விடவும் வறியவர்களையே கடுமையாகப் பாதிப்பதனால் இந்த வற் வரி பிற்போக்கான ஒன்றாகும். கடந்த காலத்தில் வற் வரியில் இருந்து பல பொருட்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்ட அந்த வரி விற்பனை செய்யப்படும் சகல பொருட்களுக்கும் பிரயோகிக்கப்படுகிறது. ஏற்கனவே பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கிய மக்களை இதற்குமேல் தாங்கமுடியாது என்ற நிலைக்கு இந்த வரி கொண்டுவந்திருக்கிறது.

ஆனால் இலாபமீட்டாத பெரிய வர்த்தக நிறுவனங்களின் பங்குதாரர்களும் ஊழியர்களும் இந்த வரியில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பது வரிவிதிப்பில் உள்ள நேர்மையற்ற தன்மையாகும்.

### சவாலுக்குள்ளாகும் யுக்திய

கோடிக்கணக்கில் சம்பாதிப்பவர்கள் விட்டுவைக்கப்படுகின்ற அதேவேளை படிநிலையில் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் பிடிபடுகின்ற இதே போன்ற தோற்றப்பாட்டை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் போதைப்பொருளுக்கு எதிரான போரிலும் காணக்கூடியதாக இருக்கிறது.

போதைப்பொருள் கடத்தலையும் திட்டமிட்ட குற்றச்செயல்களையும் முறியடிக்கும் இலக்குடன் முன்னெடுக்கப்படும் ‘யுக்திய” (நீதி) நடவடிக்கையில் 2023 டிசம்பர் 17 தொடக்கம் டிசம்பர் 31 வரையான இரு வார காலப்பகுதியில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாக ( தற்போது இந்த எண்ணிக்கை 30 ஆயிரத்தை அண்மிக்கிறது) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியிருக்கிறது.

போதைப்பொருள் கடத்தலையும் திட்டமிட்ட குற்றச்செயல்களையும் முறியடிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை யுக்திய நடவடிக்கையின்போது சித்திரவதை, மனிதத்தன்மையற்ற முறையில் நடத்துதல், அடாத்தான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் தொடர்பில் பெருவாரியான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகிறது.

போதைப்பொருள் பிரச்சினை பல வருடங்களாக படுமோசமாகத் தீவிரமடைந்து வந்திருக்கிறது. இதை உலகில் காணப்படக்கூடியதாக இருக்கும் நிலைலரத்துடன் சமாந்தரமானதாக நோக்கவேண்டும்.

ஒரு இடைத்தரிப்பு நிலையமாக இலங்கை விளங்குவதே இந்த போதைப்பொருள் பிரச்சினை சிக்கலானதாக மாறியிருப்பதற்கு ஒரு முக்கிய காரணமாகும். தங்களது அரசியல் மற்றும் அதிகாரத் தொடர்புகளின் விளைவாக தண்டனையின்மையை அனுபவிக்கும் பேர்வழிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பெரும் பணம் பண்ணுகிறார்கள்.

இன்று போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்ற வல்லமைகொண்ட பெரிய பணக்காரர்களைப் பொறுத்தவரை மிகவும் வறிய வாழ்க்கைப் பின்னணியில் இருந்து கோடீஸ்வரர்களான பல கதைகள் இருக்கின்றன.

போதைப்பொருள் வர்த்தகத்தை முறியடிப்பதற்கான

(16ம் பக்கம் பார்க்க)

> “சர்வதேச சமூகத்தில் இலங்கையின் உண்மையான நிலை பற்றிய விழிப்புணர்வு இல்லாததாக அமைந்த அணுகுமுறையில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்புக்கு பிறகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்வாங்கியிருக்கிறார் போன்று தோன்றுகிறது.



# தேசிய உறவுகளிலும் சர்வதேச உறவுகளிலும்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்ந்து நிலைபேறானதாக இருக்குமா அல்லது முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஒருவரினால் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருளுக்கு எதிரான போரைப் போன்று இருக்குமா என்பது முக்கியமான கேள்வி.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்துக்காக பிலிப்பைன்ஸில் ஆயிரக்கணக்கானவர்கள் வீதிகளில் ஈவிரக்கமற்ற முறையில் கொன்று குவிக்கப்பட்டார்கள். ஆனால் அந்த ஜனாதிபதி இப்போது பதவியில் இல்லை, ஆனால் போதைப்பொருள் பிரச்னை தொடருகிறது.

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கை இப்போது சர்வதேச கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. யுக்திய நடவடிக்கையை மீளாய்வு செய்யுமாறும் சமூகத்தில் சட்டவிரோத போதைப்பொருள் பிரச்சினையைக் கையாளுவதில் சுகாதாரம் தொடர்பிலான உரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்து மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்துமாறும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் ரேர்க் அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.

“போதைப்பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் அவற்றுக்கு ஏன் அடிமையானார்கள் என்ற காரணங்களைக் கண்டறிந்து அவர்களை சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைப்பதற்கு அவசியமான ஆதரவை வழங்கி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். போதைப்பொருள் பாவனையையும் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக போதைப்பொருளை வைத்திருப்பதையும் குற்றச்செயல் நீக்கம் செய்வது உட்பட பயனுறுதியுடைய போதைப்பொருள் கொள்கைகளை வகுக்கவேண்டும் என்று அரசாங்கங்களுக்கு அழைப்புவிடுத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் கடந்த வருடம் அறிக்கையொன்றை வெளியிட்டது” என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த சிந்தனையை அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை. ஆட்சிமுறையில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை தொடர்பில் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளையே கண்டுகொள்ளாத ஒரு அரசாங்கத்திடம் இதை எதிர்பார்க்க முடியுமா?

தேசியப் பிரச்சினைகள் தொடர்பிலான அரசாங்கத்தின் சிந்தனை அதன் சர்வதேச உறவுகளுக்கும் விரிவுபடுத்தப்படுகின்றது. தாக்குதல்களில் இருந்து சர்வதேச கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்கான கூட்டு சர்வதேச நடவடிக்கையின் அங்கமாக இலங்கை கடற்படையை செங்கடலுக்கு அனுப்பும் தீர்மானத்தை அரசாங்கம் இலங்கையின் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்டது என்று கூறி நியாயப்படுத்திக்கொண்டிருக்கிறது.

அதிர்ஷ்டவசமாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த மத்திய கிழக்கு நாடுளின் தூதுவர்களிடமிருந்து வந்த ஆலோசனையும் நெருக்குதலும் பயன் தந்திருக்கிறது போன்று தெரிகிறது.

சர்வதேச சமூகத்தில் இலங்கையின் உண்மையான நிலை பற்றிய விழிப்புணர்வு இல்லாததாக அமைந்த முன்னைய அணுகுமுறையில் இருந்து ஜனாதிபதி பின்வாங்கியிருக்கிறார் போன்று தெரிகிறது.

காசாவில் உடனடி போர்நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று இலங்கை விரும்புகிறது என்றும் மோதல்கள் முடிவுக்கு வந்தவுடன் காசாவுக்கு இலங்கை உதவிகளை அனுப்பும் என்றும் அவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

செங்கடலில் நிலவும் பிரச்சிகைளின் விளைவாக சர்வதேச கப்பல் நிறுவனங்கள் தாக்குதல் இடம்பெக்கூடிய செங்கடலின் ஊடாக குறுக்கு வழியைப் பயன்படுத்துவதை தவிர்த்து இப்போது கொழும்பு துறைமுகத்தைப் பயன்படுத்த விரும்புகின்றன.

செங்கடலின் ஊடாக செல்லும் வர்த்தக கப்பல்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து அண்மைய நாட்களாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான முனையத்தினால் கையாளப்படும் கொள்கலன் தொகுதிகளின் அளவு சுமார் 80 சதவீத அதிகரிப்பைக் கண்டிருக்கிறது. அதனால் செங்கடலில் இராணுவ நடவடிக்கையில் சம்பந்தப்படுவதற்கு கூறப்படும் பொருளாதார நியாயப்பாட்டை புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது.

‘செங்கடலுக்கு இலங்கை கடற்படையை அனுப்பினால் அதன் நடவடிக்கைகளுக்கும் பராமரிப்புக்கும் செலவு ஏற்படும். கடல் ரோந்துக் கப்பல் ஒன்றுக்கு மாத்திரம் ஒரு மாதத்துக்கு டீசல் செலவாக சுமார் 6 கோடி ரூபா தேவைப்படும். பாரிய செலவு ஏற்படும். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கவேண்டும்” என்று ஓய்வு பெற்ற றியர் அட்மிரலும் நீரியல் நிபுணருமான வை.என். ஜயரத்ன கூறுகிறார்.

பெரிய வல்லரசுகள் மறைமுகமாக நடத்துகிற போர்கள் உலகப் பொருளாதாரத்தினதும் அப்பாவி மக்களினதும் நலன் கருதி நிறுத்தப்படவேண்டும். பெரும் எண்ணிக்கையான குடிமக்களின் இழப்புகளுடன் நீண்டு கொண்டுபோகும் காசாப் போருக்கும் உக்ரெயின் போருக்கும் இது பொருந்தும்.

பெருமளவில் உயிரிழப்புகளும் சொத்து நாசமும் ஏற்படுகிறது. இது மனித குலத்துக்கு எதிரான ஒரு குற்றச்செயலாகும். நாடுகள் குழு ஒன்றுக்கு எதிராக இன்னொரு குழு நாடுகளுடன் இணைவதற்கு பதிலாக, இலங்கை ஒரு காலத்தில் அணிசேரா நாடுகள் இயக்கத்துக்கு தலைமை தாங்கிய ஒரு நாடு என்ற வகையில் செங்கடலிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் நிலவும் நெருக்கடிகளுக்கான மூலவேர்க் காரணிகளைக கையாளுவதற்கு அதன் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தவேண்டியது அவசியமாகும்.

அரசாங்கத்தின் நோக்கம் பெரும்பான்மையானவர்களினதோ சிறுபான்மையானவர்களினதோ நல்வாழ்வுக்கானதாக அன்றி சகலரினதும் நல்வாழ்வுக்கானதாக -- பொதுநன்னைமக்கானதாக இருக்கவேண்டும்.

தேசிய உறவுகளிலும் சர்வதேச உறவுகளிலும் நடத்தைகளில் அரசாங்கம் வழங்கவேண்டியிருக்கும் தலை மைத்துவம் ஒழுக்க முறைமையின் அடிப்படையிலானதாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

